**தலைப்பு 220 – ஆயுர்வேத திணைக்களம்**

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆயுர்வேத திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 16ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்கள் நீங்கலாக, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆயர்வேத திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2(இ), 1.6.5, 1.6.6(அ), 1.6.7 மற்றும் 5.1ஆம் பந்திகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகளின் பிரகாரம், கடந்த வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் கூட்டிக் காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிச்செயலாற்றல் கூற்றில் முற்பணம் பெறுகை மற்றும் முற்பணக் கொடுப்பனவாக முறையே ரூபா 51.974 மில்லியன் மற்றும் ரூபா 57.225 மில்லியன் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், திறைசேரியின் அச்சிடப்பட்டிருந்த கணனித் தரவுகளுக்கு அமைய முற்பணப் பெறுகை மற்றும் கொடுப்பனவு முறையே ரூபா 53.309 மில்லியன் மற்றும் ரூபா 58.560 மில்லியனாக உறுதிப்படுத்தப்பட்டமையால் வேறுபாடு முறையே ரூபா 1.335 மில்லியனாகக் காணப்பட்டது. | சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளுக்கு அமைய போதியளவு கவனத்துடன் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதியைப் பெற்றுக் கொள்ளல் தவறான தலைப்பின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளமை, அறவிடல் குறைபாட்டுடன் மார்ச் மாதத் திறைசேரி அச்சுப்பிரதியில் குறிப்பிடப்பட்டிருந்தமை, அந்தத் தவறினைத் திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் முன்னர் குறிப்பிட்டிருந்தவாறே வழுக்களுடனேயே திறைசேரி அச்சுப் பிரதியில் குறிப்பிடப்பட்டிருந்தமை மற்றும் அதற்கமைய அரச கணக்குகள் திணைக்களத்தின் |

| | | |
|---|---|---|
| | | அறிவுரைக்கமைய திசெம்பர் மாதம் மீளவும் பேரேட்டு குறிப்பின் மூலம் முன்னையவாறே உரிய திருத்தல்கள் மேற்கொள்ளப்பட்டமை. |

1.6.2 நிதி நிலைமைக் கூற்று

---------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அ) 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற வேண்டிய முற்பணம் ரூபா 787,894 சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றில் நிதிச் சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் போதியளவு கவனத்துடன் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் வேண்டும். | அவ்வாறு தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்கள் ரூபா 782,147 நிதிக்கூற்றில் ACA – 3 படிவத்தில் செலுத்தப்படாத கட்டுநிதி மீதியாகக் காட்டப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு என்பதும் மற்றும் தற்போது அந்த முற்பணம் தீர்க்கப்பட்டுள்ளது என்பதும். |
| ஆ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் தீர்க்கப்படவேண்டிய கட்டுநிதி மீதியாக ரூபா 5,748 குறிப்பிடப்பட்டிருந்ததுடன், மாதாந்த கணக்கீட்டுப் பொழிப்புகளின் பிரகாரம் அந்த மீதியானது ரூபா 787,894 ஆக இருந்ததனால் வேறுபாடு ரூபா 782,146 ஆகக் காணப்பட்டது. | சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் போதியளவு கவனத்துடன் நிதிக்கூற்றினைத் தயாரித்தல் வேண்டும். | தீர்க்கப்படாத முற்பணப் பெறுமதியான ரூபா 782,147 அந்த வேறுபாடாக உள்ளதுடன் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. திறைசேரிக்கு எம்மால் உண்மையாக தீர்க்கப்பட்டுள்ள பெறுமதியான ரூபா 5,748 மட்டுமே என்பது. |
| இ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி நிலைமைக் கூற்றுக்கு அமைவாக 2019 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளபடியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மொத்த செலவு ரூபா 2,815,872 மில்லியனைக் | - மேற்படி - | Cigas வேலைத்திட்டத்தில் கணனி ஒழுங்கமைப்புக் குறைபாடு காரணமாக அதற்கு உள்ளீடு செய்யப்பட்டுள்ள ஒருசில பெறுமதிகள் சொத்து கணக்கு பொழிப்பில் |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஏசீஏ-6 குறிப்பிற்கு அமைய அந்த பெறுமதி ரூபா 4,672.221 மில்லியனாகவும், திறைசேரி கணனி அச்சுப்பிரதியின் பிரகாரம் அந்தப் பெறுமதி ரூபா 4,303.982 மில்லியனாகவும் காணப்பட்டமையால், வேறுபாடு முறையே ரூபா 1,856.349 மில்லியன் மற்றும் ரூபா 1,488.110 மில்லியனாகவும் காணப்பட்டது. | | உள்ளீர்க்கப்படவில்லை என்பதும் மற்றும் எதிர்காலத்தில் இந்தக் குறைபாட்டினைத் திருத்திக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதும் |
| ஈ) | சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிநிலைமைக் கூற்றுக்கு அமைய 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் அரச ஊழியர்களின் கடன் மீதி ரூபா 114.056 மில்லியன் ஆக இருப்பதுடன், திணைக்கள தனித்தனி மீதி பட்டியலுக்கமைய அந்த கடன் மீதியானது ரூபா 114.223 மில்லியனாக இருப்பதனால் வேறுபாடானது ரூபா 0.167 மில்லியன் ஆகும். | - மேற்படி - | காட்டப்பட்டுள்ள வேறுபாடுகளில் அதிகளவானது இதுவரையில் திருத்தப்பட்டுள்ளது என்பதும், தனித்தனி மீதி தவறாக சேர்க்கப்பட்டுள்ளமையைத் திருத்தம் செய்யப்பட்டு மேலும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 22,773 எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்யப்படும் என்பதும். |

1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

---

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காசுப்பாய்ச்சல் கூற்றில் வேறு செலவினத் தலைப்புகளுக்காக செலவிடப்பட்ட செலவுகளாக ரூபா 3.491 மில்லியன் காட்டப்பட்டிருந்தபோதிலும், மாதாந்த கணக்குப் பொழிப்புகளின் பிரகாரம் அது ரூபா 2.709 மில்லியனாக இருந்ததால், ரூபா 0.782 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் போதியளவு கவனத்துடன் நிதிக்கூற்றினைத் தயாரித்தல் வேண்டும். | ஜனாதிபதி தேர்தலின் போது திணைக்கள ஊழியர்களுக்கு முற்பணத்தின் மூலமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 782,147 தொகையானது மாதாந்த கணக்குப் பொழிப்புகளில் வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்காக செய்யப்பட்ட செலவுகளாக அறியப்பட்டிருக்காத காரணத்தினால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது என்பது. |

1.6.4 கட்டுநிதி இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள கட்டுநிதி சீராக்கல் கணக்கில் வேறு அமைச்சுகள், திணைக்களம் மற்றும் மாவட்டச் செயலகங்களுக்காக செய்யப்பட்ட செலவு ரூபா 3.491 மில்லியன் வரையிலும் காணப்பட்ட போதிலும் மாதாந்த கணக்குப் பொழிப்புகளுக்கு அமைய மதிப்பீடு ரூபா 2.704 மில்லியனாக இருந்தமையால் வேறுபாடு ரூபா 0.787 மில்லியனாகக் காணப்பட்டது. | சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் போதியளவு கவனத்துடன் நிதிக்கூற்றினைத் தயாரித்தல் வேண்டும். | 2019ஆம் ஆண்டு தேர்தல் கடமைக்காகத் திணைக்களம் பதவியணியினருக்கு முற்பணமொன்றின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 782,147 தொகையானது வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்காக செய்யப்பட்ட செலவாக மாதாந்த கணக்குப் பொழிப்புகளில் காட்டப்பட்டிருக்கவில்லை என்பது. |
| ஆ) 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 787,894 சமர்ப்பிக்கப்பட்டிருந்த கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் போதியளவு கவனத்துடன் நிதிக்கூற்றினைத் தயாரித்தல் வேண்டும். | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 782,147 கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கில் வேறு அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,491,698 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது. |

1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே தரப்பட்டுள்ள சில ஆவணங்கள் பேணப்பட்டிருக்காததுடன், சில ஆவணங்கள் முறையாகவும் மற்றும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்காமை மாதிரி கணக்காய்வுப் பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **அ) பிணைப் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் வைத்தியசாலைப் பதவியணியினர் உள்ளிட்ட பிணை வைக்கப்பட வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளிட்ட பிணைப் பதிவேடு இற்றைப்படுத்தப்படாது காணப்பட்டது. | நிதிப் பிரமாணம 891(1) இல் குறிப்பிப்பிட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் வகையில் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் வேண்டும். | அரச உத்தியோகத்தர்களின் பிணைப் பதிவேடு ஒன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டு உள்ளது என்பது. |
| **ஆ) மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடுகள்** | | |
| நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 454(2) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆறு கட்டங்களிலுள்ள அனைத்து மின்சார உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பொருட்கள் பதிவேட்டுப் புத்தகங்கள் பேணப்படுதல் வேண்டும். | நிதிப் பிரமாணம் 454(2) இற்கு அமைவாக மின்சார உபகரணங்கள் தற்போது பொது 44 பதிவேட்டில் இணைப்புகள் மற்றும் நிலையான சொத்துக்கள் குறிக்கப்பட்டுள்ளது என்பது. |

| | | | |
|---|---|---|---|
| **இ)** | **சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 110 இன் ஒழுங்குகளின் பிரகாரம் அதன் கீழுள்ள படிவத்திற்கு ஏற்ப சேதங்கள் தொடர்பான பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் வேண்டும். | சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு தற்போது அரச கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

1.6.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதியல்லாத சொத்துக்களின் மொத்த கிரயம் ரூபா 4,714.751 மில்லியனாக இருந்த போதிலும், அந்தப் பெறுமதியின் உண்மைத் தன்மையினை உறுதி செய்து கொள்வதற்காக இற்றைப்படுத்தப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு, பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் சிகாஸ் கணனி வேலைத்திட்டத்தின் அச்சுப் பிரதி அல்லது வேறு போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதியல்லாத சொத்துக்கள் உரிய மூல ஆவணங்கள் மற்றும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஏடுகளில் பதிவு செய்யப்பட வேண்டியதுடன், பெறுமதி மற்றும் ஏனைய தகவல்களை உறுதி செய்து கொள்வதற்காக அந்த ஏடுகள் மற்றும் மூல ஆவணங்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். | சிகாஸ் வேலைத்திட்டத்தில் கணனி ஒழுங்கமைப்பின் குறைபபாட்டினை நிவர்த்தி செய்ததன் பின் நிலையான சொத்துக்களின் பதிவேட்டின் அச்சுப் பிரதியினைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க முடியும் எனவும் மற்றும் திணைக்களத்துக்குரிய அனைத்து நிறுவனங்களினதும் 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வுப் பணிகள் தொற்றுநோய் நிலைமை காரணமாக பூர்த்தி செய்வதற்குத் தாமதமாகி உள்ளது என்பது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 திசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான நிதியற்ற சொத்துக்களின் மொத்த கிரயம் ரூபா 2,815.872 மில்லியனுக்கு ரூபா 1,856.349 மில்லியன் சீராக்கம் செய்யப்பட்டு இருப்பினும், அந்த செம்மையாக்களுக்கு உரிய பேரேட்டுக் குறிப்புகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | - மேற்படி - | கொள்முதல் கோவைகள் உள்ளிட்ட கணக்காய்வினால் கேட்கப்படும் எந்த ஒரு கோவையை உடனுக்குடன் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளமை வருந்தத்தக்க விடயம் என்பதும். |
| (இ) | நிதிக்கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஏசீஏ-6 குறிப்பின் பிரகாரம், மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துக்களின் மொத்தக் கிரயம் ரூபா 42.529 மில்லியனாக இருந்த போதிலும் அந்தப் பெறுமதியை உறுதி செய்து கொள்வதற்கான துணை ஏடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மாதாந்த கணக்குப் பொழிப்பு மற்றும் கொடுப்பனவு செலவுப் பதிவேடுகளில் சரியாகப் பதிவு செய்யப்பட்டு அந்தப் பெறுமதி நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ளது என்பதும் மற்றும் எதிர்காலத்தில் சிகாஸ் வேலைத்திட்டம் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் அச்சுப் பிரதியினைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க முடியும் என்பதும். |
| (ஈ) | 25 மூலதன செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிகர நிதி ரூபா 355.106 மில்லியனில் ரூபா 341.062 மில்லியன் மீதமாக இருந்ததுடன் மீதியானது அந்த 25 செலவு விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டின் 50 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. அந்த மிகுதிக்கான காரணமாக நிதிக் கூற்றுக்களில் | யாதேனும் ஒரு ஆண்டில் நிதிக் கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கையில், நிகர நிதி மீதிக்கான காரணமாக நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளின் உண்மைத் தன்மையினைப் பரீட்சித்துப் பார்ப்பதற்குத் தேவையான அனைத்துத் | தேசிய வரவு செலவுச் சுற்றறிக்கை இலக்கம் 4/2019 இன் பிரகாரம் முன்னுரிமை இல்லாத மூலதனச் செலவுகளை நிறுத்தி வைத்தல் மற்றும் கட்டுநிதி கிடைக்காத காரணத்தினால் மூலதன நிதி மீதியாக இருந்தது என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களின் உண்மைத் தன்மையினைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு கொள்முதல் கோப்பு மற்றும் ஏனைய ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல்களையும் சமர்ப்பித்தல் வேண்டும். | |
| (உ) | மீளாய்வாண்டில் அரச வருமானத்தில் வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 3.806 மில்லியன் வைப்பு தொடர்பில் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதனை உறுதி செய்து கொள்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | வைப்பு தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதி செய்து கொள்வதற்கான சான்றுகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். | உரிய வாடிக்கையாளர்களைத் தெளிவுறுத்திய பின்னர் இரண்டு வருடங்கள் கடந்த வைப்புகளை அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது என்பது. |

1.6.7 கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படவேண்டிய சான்றுபடுத்தல்கள்.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்கள நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைதிறனான உள்ளகக் கட்டுப்பாட்டு ஒழுங்கமைப்பொன்றினைத் தயாரித்து பேணிச் செல்லப்படுகின்றது என்பதனைக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த ஒழுங்கமைப்பின் வினைதிறன் தொடர்பாக முன்னர் செய்த மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய ஒழுங்கமைப்பு உற்பத்தித் திறனாக நடாத்தப்பட்டு வருவதற்குத் தேவையான வேறுபாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் அந்த | 2018 இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்ததுடன், அந்தச் சுற்றறிக்கையின் பிரதிகள் அரச கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதும் மற்றும் இந்த சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதை அவதானித்தல், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியினை கணக்காய்வாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பினும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதற்கான அறிக்கைகளை கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. | அந்தச் சுற்றறிக்கைகளின் பிரதிகள் மீளவும் இதனுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது என்பதும். | |

1.6.8 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

---

மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்புகள் | | இணக்கமின்மைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | | | |
| | ரூபா | | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் xix அத்தியாயத்தின் 5.2.1, 5.2.2, 5.2.3 மற்றும் 5.8 ஆம் பிரிவுகள். | - | திணைக்களத்தினால் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான பதிவேடு ஒன்றினைப் பேணுவதற்கு ஆரம்ப காலத்திலிருந்தே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பொரளை வைத்தியசாலையின் உத்தியோகபூர்வ இடங்களில் குடியிருக்கும் வைத்தியாலைப் பணிப்பாளர் மற்றும் தாதி உத்தியோகத்திடமிருந்து அறவிடப்படவேண்டிய வீட்டு வாடகையை விடக்குறைவான வீட்டு வாடகையே அறவிடப்பட்டிருந்தது. உத்தியோக இல்லத்தில் குடியிருந்த அவசர ஊர்தி ஓட்டுனரிடம் மற்றும் வாடகை அறவிடப்பட வேண்டிய அறைகளில் குடியிருந்த தாதியிடம் | தாபன விதிக்கோவை யின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | கருத்து தெரிவிக்கப்பட்டிருக் கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மற்றும் தேசிய வைத்திய பிரிவு ஓட்டுனர் உள்ளிட்ட குடியிருப்பில் தங்கியிருக்கும் ஏனைய ஓட்டுனர்களிடமும் வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அந்த உத்தியோகபூர்வ இல்லங்களின் மற்றும் அறைகளின் நீர் மற்றும் மின்சாரத்திற்கான கட்டணங்கள் அந்த உத்தியோகத்திடமிருந்து அறவிடப்பட்டிருக்கா-ததுடன் அந்தச் செலவுகள் வைத்தியசாலையின் செலவுகளாகக் காணப்பட்டன. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 104 (3) மற்றும் (4) | 187,706 | மீளாய்வாண்டில் இடம்பெற்றிருந்த 03 வாகன விபத்துக்ககள் தொடர்பில் ஆரம்பகட்ட அறிக்கை அல்லது இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டில் வாகனமொன்று விபத்துக்கு உள்ளானமையால் ஏற்பட்டிருந்த நட்டத்தினை மதிப்பீடு செய்து ஏடுகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்காததுடன் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பரீட்சித்தல் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அந்த அறிக்கையினை விரைவில் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. |
| (இ) | 2019 மார்ச் 28 ஆம் திகதியிலான இலக்கம் PS/PCMD/13/2019 கொண்ட ஜனாதிபதி சுற்றறிக்கை | 13,013,556 | பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையின் நீர் மற்றும் மின்சாரத்தினைப் பயன்படுத்தும் 4 விற்பனைக் கூடங்களுக்கும் மற்றும் 2017 ஜுன் 02 ஆம் திகதி தொடக்கம் நடாத்தப்பட்டு வரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கீழ் காணப்படும் உள்நாட்டு வைத்திய பட்டப்படிப்பு நிறுவனத்திற்கும் வேறு வேறாக நீர் மற்றும் மின்சாரமானிகள் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக் கவில்லை. |

பொருத்தப்பட்டிருக்காததுடன் பயன்படுத்தப்படும் நீர் மற்றும் மின்சாரத்திற்காக எவ்விதமான கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், மின்சாரத்தைப் பாதுகாப்பதற்காக போன்றே நீர் மற்றும் மின்சார பாவனையை வினைத்திறனாக்குவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை திணைக்களத்தினால் இந்த சுற்றறிக்கை ஏற்பாடுகள் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் நோயாளர் சிகிச்சை சேவை மற்றும் ஆராய்ச்சி செயற்திட்டத்திற்கு உரிய உணவு, பானங்கள் மற்றும் சீருடை மற்றும் வைத்திய வழங்கல்கள் போன்ற செலவு விடயங்களுக்கு மீளாய்வு ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முழு நிகர நிதி முறையே ரூபா 130.2 மில்லியன் மற்றும் ரூபா 52.5 மில்லியனாக இருந்த போதிலும், உண்மை செலவானது முறையே ரூபா 77.41 மில்லியன் மற்றும் ரூபா 28.7 மில்லியனாக இருந்தமையால் மீதியானது முறையே ரூபா 52.79 மில்லியன் மற்றும் ரூபா 23.8 மில்லியன் அதாவது 41 சதவீதம் மற்றும் 45 சதவீதம் ஆகும். | ஒதுக்கப்பட்ட நிதியினை குறித்த வகையில் பெற்றுக்கொண்டு உற்பத்தித் திறனாக ஈடுபடுத்தி நோயாளர் பராரிப்பு சேவையினைத் தொடர்ச்சியாக தடைகள் எதுவுமின்றி நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதியேற்பாடு எஞ்சியிருந்தமை தொடர்பில் உடன்படுவதுடன், பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நிதி எல்லைக்குள் வைத்தியசாலைகள் செயற்திறனாக நடாத்திச் செல்லப்பட்டு உள்ளது என்பது. |

திணைக்களத்தினால் கட்டுநிதிக்காக விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரியினால் போதுமானளவு கட்டுநிதி வழங்கப்படாத காரணத்தினால் பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியினைப் பயன்படுத்த முடியாதிருந்தது. இதன் காரணமாக வைத்தியசாலைகளில் அத்தியாவசிய சேவைகளைத் தொடர்ந்து நடத்துவதில் சிக்கல்கள் தோன்றியிருந்தன.

## 2.2 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 15.55 மில்லியனான போதிலும் உள்ளபடியான வருமானம் ரூபா 30.95 மில்லியனாக இருந்தமையால் வேறுபாடு ரூபா 15.4 மில்லியன் அதாவது 99 சதவீதம் ஆகும். | நடைமுறைச் சாத்தியமான வருமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019ஆம் ஆண்டில் இரண்டு ஆண்டுகளைக் கடந்த வைப்புக்களை அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டதனால் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை மிஞ்சி உள்ளது என்பதும், மற்றும் எதிர்வரும் வருடத்தில் வருமான மதிப்பீடு தயாரிக்கையில் இது தொடர்பில் கவனம் எடுக்கப்படும் என்பதும். |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரச உத்தியோகத்தர்களின் கடன் தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம், இடமாற்றம் பெற்றுச் | திணைக்கள அலுவலகங்களுக்கிடையே இடமாற்றம் பெற்றுச் சென்ற | அரச உத்தியோகத்தர்களின் அறவிடப்படாத கடன் மீதிகள் இதற்கு முன்னர் |

சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து அறவீடுகள் முழுமையாக நிலுவையாக உள்ள மீதிகளின் மொத்தத் தொகை ரூபா 1.88 மில்லியனாக காணப்பட்டது. அந்த நிலுவையாகவுள்ள கடன் மீதிகள் 02 வருடம் தொடக்கம் 05 வருடங்கள் கடந்த கால வீச்சில் காணப்பட்டது.

உத்தியோகத்தர்களின் கடன் மீதி 2004 ஒக்டோபர் 11ஆம் திகதியிலான 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் 1ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றி உத்தியோத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்று 03 மாதத்தினுள் தீர்க்கப்படல் வேண்டும். அவ்வாறே, மாகாண சபைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் நிலுவையிலுள்ள கடன்மீதிகளை அந்தச் சுற்றறிக்கையின் 3ஆவது பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தீர்க்கப்படுதல் வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக்கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 பந்தியின் பிரகாரம் ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என மேற்கூறிய சுற்றறிக்கையின் 8ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளமையால் அதற்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஆவ்வாறே, கடன்

காணப்பட்ட மீதிகளை விட ஒப்பிட்டளவில் குறைக்கப்பட்டுள்ளது என்பதும் மற்றும் மேலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும்.

தொகையை மீளச் செலுத்தி முடிவுறுத்தும் முன்னர் ஓய்வு பெறும் அல்லது மரணிக்கும் அல்லது சேவையை முடிவுறுத்தும் உத்தியோகத்தரினது மற்றும் அரச கூட்டுத்தாபனத்திற்கு விடுவிக்கப்படும் உத்தியோகத்தரினது கடன் மீதி தொடர்பில் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

2.4 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | சிபாரிசுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2017 ஏப்பிரல் 27ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம், இனங்காணப்பட்ட கடப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அந்தக் கடப்பாடுகளுக்கு உரிய பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதற்காகச் செலுத்தப்பட வேண்டிய தொகை மற்றும் உடன்படிக்கைகளை ஏற்படுத்தும் ஒப்பந்தங்கள் தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்ட வேலைகளின் பெறுதியை பொறுப்பாக குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும், 11 நிர்மாண ஒப்பந்தங்களுக்கு உரியதான ரூபா 18.1 மில்லியன் பொறுப்புகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் | மீளாய்வாண்டிற் அனைத்து பொறுப்புக்களையும் நிர்ணயிக்கப்பட்ட வகையில் வெளிப்படுத்துவதற்காக நடைமுறையொன்றினைத் தோற்றுவித்தல் வேண்டும். | உறுதிப்படுத்தப்பட்ட வேலைகளுக்கு உரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அல்லது நிதி மொத்தச் செலவுகள் தொடர்பான தகவல்கள் உரிய பிரிவுகளிடமிருந்து 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் மற்றும் 2020 பெப்ரவரி மாதம் வரையிலும் கொடுப்பனவிற்காக இருந்த முழு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் மொத்தப் பெறுமதியும் பொறுப்பாக காட்டப்பட்டிருந்தது என்பதும். |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் முற்றும் ஆயர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களுக்கு உரிய பொறுப்புக்கள் முறையே ரூபா 0.876 மில்லியன் மற்றும் ரூபா 19.961 மில்லியனான போதிலும், அந்த நிறுவனங்களில் பெற்றுக்கொண்ட சான்றுபடுத்தல்களின் பிரகாரம் அந்தப் பெறுமதிகள் முறையே ரூபா 1.608 மில்லியன் மற்றும் ரூபா 34.638 மில்லியனாக இருந்தமையால் வேறுபாடு முறையே ரூபா 0.732 மில்லியன் மற்றும் ரூபா 14.677 மில்லியனாக உள்ளது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | பொரளை ஆயர்வேத வைத்தியசாலையைப் போதனா வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்வதன் 02 ஆம் கட்டத்தின் கீழ் 08 மாடிகளைக் கொண்ட கூட்ட நிர்மாணத்திற்காக 2018 திசெம்பர் 31ஆம் திகதி தொடக்கம் செலுத்தப்பட வேண்டி இருந்த உறுதிப்படத்தப்பட்ட ஒப்பந்த வேலைகளின் பெறுமதி ரூபா 145.75 மில்லியன் பொறுப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன், அதற்குப் பதிலாக 2020 ஆம் ஆண்டில் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 3.276 மில்லியன் வரையிலும் பொறுப்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

2.5 ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு வழங்ப்பட்ட நிதியேற்பாட்டினைப் பயன்படுத்தல்

---

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் ஆயர்வேதத் திணைக்கத்திற்கு மற்றும் மாவட்டச் செயலகத்திற்கு ரூபா 214.81 மில்லியன் நிதி ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான செலவு ரூபா 216 மில்லியனாகக் காணப்பட்டது. அந்த செயற்றிட்டங்களுக்கு உரியதான பௌதீக முன்னேற் கணக்காய்வதற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | திணைக்களத்திலுள்ள பொறியியலாளர், பொறியியல் உதவியாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோரை உள்ளடக்கிய பதவியணியினரின் நேரடி மேற்பார்வையின் கீழ் சிறிய அளவிலான நிர்மாணங்களை மேற்கொள்ளுவதற்கும் மற்றும் அதற்கு உரிய கொள்முதல் நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் நிர்மாணங்களின் பௌதிக முன்னேற்றங்கள் இதனுடன் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், 2019 ஆம் ஆண்டில் இளையோர் மூலிகை விவசாய வேலைத்திட்டத்தின் நிதி ஏற்பாடுகள் மாவட்டச் செயலாளர் அலுவலகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதும், பதவிய மூலிகை பயிர் நிலத்தில் கிணறு அமைப்பதற்காக உரிய இடப் பரிசோதனை அறிக்கையை பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால் அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதும், எஞ்சிய செயற்றிட்ட் ஒப்பந்தத்தின்படி செயற்படுத்தப்பட்டுள்ளது என்பதும் மற்றும் பல பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 பணிப்பொறுப்புகள் தொடர்பிலான செயன்முன்னேற்றத்தினை மீளாய்வு செய்திராமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் கீழுள்ள அனைத்து பிரிவுகள், உப நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலை மற்றும் மூலிகைப் பூங்காக்களுக்கு உரிய செயற்பாடுகளின் செயல் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்வதற்காக செயலாற்றல் குறிகாட்டிகள் உருவாக்கப்பட்டிருக்காததுடன் நடவடிக்கைகளின் செயல் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகளுக்காக செயலாற்றல் குறிகாட்டி உருவாக்கப்பட்டு செயல் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். | செயலாற்றல் குறிகாட்டி உருவாக்குவதற்கு தற்போது நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையினை முடியுமான அளவு விரைவாகப் பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காத காரணத்தினால் செயல் முன்னேற்ற அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக கடமைகளை நிறைவேற்றாமை, முக்கிய செயல்களுக்கு முரணான செயற்பாடுகள், எதிர்பார்த்த நிறைவு மட்டத்தினைப் பெற்றுக் கொள்ளாமை, எதிர்பார்த்த விளைவுகளைப் (Outcome) பெற்றுக் கொள்ளாமை, செயற்றிட்டங்களை நிறைவு செய்யாது கைவிடல், செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தலில் தாமதம் மற்றும் கால தாமதத்தின் பின்னர் வேலை தொடங்கப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பான பரிட்சீப்புகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | செயற்பாட்டுத் திட்டம் மற்றும் அதன் அடிப்படையாகக் கொண்டு செயல் முன்னேற்ற மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மனித வள தட்டுப்பாடாக உள்ளது என்பது, இந்த விடயத்திற்குப் புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்து வருதல் என்பது, மீளாய்வு ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்திற்குரிய செயல் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. |

3.2 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை

3.2.1 திணைக்களத்தினால் 1961 இன் 31ஆம் இலக்க ஆயர்வேத அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ | அதிகாரச்சட்டத்தின் 7ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்ற அதிகாரச் சட்டத்தின் 08வது பிரிவின், ஆயர்வேத மருத்துவமனைகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களை நிறுவி நடாத்திச் செல்வதற்கு ஆயர்வேத ஆணையாளருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களும் மற்றும் மத்திய அரசினால் தாபிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவமனைகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களைத் தாபித்தலை கருத்திற்கொண்டு புதிய மருத்துவமனைகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களைத் தாபிப்பதற்கு மிகப் பொருத்தமான பிரதேசத்தினைக் கண்டறிவதற்கும் மற்றும் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான கற்கையின் பின்னர் ஆயர்வேத மருத்துவமனை மற்றும் அத்துடன் இணைந்த நிறுவனங்களைத் தாபிப்பதற்கான திட்டமொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுகின்றமை என்பதும் மற்றும் முறையான கற்கையின் பின்னர் திட்டமிடலுடன் இந்த நிர்மாணத்தை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும். |
| (ஆ) | திணைக்களத்தினால் ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை மற்றும் மூலிகை பூங்காக்களுக்குரிய தரம் மற்றும் மூலப்பிரமாணங்களை அறிந்து கொள்ளாது 04 ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, 07 ஆயுர்வேத வைத்தியசாலை | ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை மற்றும் மூலிகை பூங்காக்களுக்குரிய தரம் மற்றும் மூலப்பிரமாணங்களை அறிந்து கொள்ளல் வேண்டும் | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் 08 மூலிகை பூங்காக்கள் தவிக்கப்பட்டிருந்தன. நோயாளர் பராமரிப்பு சேவைகள் மற்றும் ஆயுர்வேத மாணவர்களின் போதனா நடவடிக்கைகளை தரமான மட்டத்தில் இடம் பெறாமைக்கு இந்த நிலைமை காரணமாக இருந்த சந்தர்ப்பமாகும். | | |
| (இ) | அதிகாரச்சட்டத்தின் 10ஆவது பிரிவின் பிரகாரம், தனியார் மற்றும் அரச துறையின் மருத்துவமனைகள், மருந்து உற்பத்தியகங்கள், மருந்தகங்கள் மற்றும் மருந்து களஞ்சியசாலை உள்ளிட்ட ஆயுர்வேதத்துடன் இணைந்த நிறுவனங்களைப் பதிவு செய்தல் தொடர்பான செயற்பாடுகளை நிறைவேற்றுகையில் பின்பற்ற வேண்டிய முறைகள் தொடர்பாக அதிகாரச் சட்டத்தின் 10(4) பிரிவின் பிரகாரம் கட்டளை பிறப்பிக்கவும் மற்றும் அந்த கட்டளை உள்ளிட்ட வழகாட்டல் நூலொன்றைத் தயாரித்து சட்ட ரீதியாக்குவதற்கு 2020 செப்டெம்பர் 30ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1961 இன் 32 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - மேற்படி - |
| (ஈ) | அதிகாரச்சட்டத்தின் 10ஆவது பிரிவின் பிரகாரம், ஆயுர்வேதத்துடன் தொடர்புபட்ட அனைத்து தனியார் நிறுவனங்களும் உள்ளிட்ட மத்திய அரசு, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழ் இயங்கி வரும் ஆயுர்வேத வைத்தியசாலை, ஆயுர்வேத மத்திய மருந்தகம் மற்றும் ஆயுர்வேத மத்திய மருந்து கூடம் மற்றும் ஆயுர்வேத மருந்து | - மேற்படி - | 1961 இன் 32 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் 10 ஆவது பிரிவு மற்றும் 1976 செப்டெம்பர் 06 ஆம் திகதியிலான 229/3 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள மருந்தக கட்டளைக் கோவைக்கமைய, பொது மக்களுக்கு மற்றும் விற்பனை நிலையங்களுக்கு விற்பனைக்காக மருந்து உற்பத்தி செய்யப்படுமாயின் அதற்காக ஆயுர்வேத திணைக்களத்தில் பதிவினைப் |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்தியகம், மருந்து நிலையம் மற்றும் மருந்து களஞ்சியசாலைகளைப் பதிவு செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் மட்டும் ஆயுர்வேதத்துடன் இணைந்த தனியார் நிறுவனம் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், பதிவு செய்யப்படாத தனியார் நிறுவனங்களை அறிந்து கொள்ளும் வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. மத்திய அரசு, மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி நிறுவனங்களின் கீழ் இயங்கி வரும் ஆயுர்வேதத்துடன் இணைந்த 04 நிறுவனங்கள், மற்றும் 04 மருந்து உற்பத்தியகங்கள் மட்டும் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அரசதுறையின் கீழ் உள்ள ஆயுர்வேதத்துடன் இணைந்த அனைத்து நிறுவனங்களும் பதிவு செய்யப்பட்டு இருக்காமை உறுதி செய்யப்பட்டிருந்தது. | | பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதும், கொழும்பு மற்றும் கண்டி நகர சபையின் கீழ் காணப்படும் உற்பத்தி நிலையங்கள் மற்றும் ஆயுர்வேத மருந்து கூட்டுத்தாபனம் தமது உற்பத்தியினை சந்தைக்கு வழங்குவதனால் பதிவினைப் பெற்றுக் கொண்டுள்ளது என்பது, அரச மற்றும் மாகாண அரச ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் ஏனைய உள்ளுராட்சி நிறுவனங்கள் தமது நோயளரின் சிகிச்சைக்காக மட்டும் மருந்து உற்பத்தியை மேற்கொள்ளுவதாக பதிவினைப் பெற்றுக் கொள்ளாமை மற்றும் ஆயுர்வேதத் திணைக்களத்தின் கீழ் உள்ள வைத்தியசாலைகளை அபிவிருத்திப் பிரிவின் ஊடாக ஒழுங்குபடுத்தப்படும் என்பது. |
| (உ) | தனியார் மற்றும் அரச பிரிவின் ஆயுர்வேதம் தொடர்பான நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் ஆயுர்வேத சிகிச்சையின் மற்றும் சத்திர சிகிச்சையிக் செயல்களுக்காகத் தயாரிக்கப்பட்ட கட்டளைகள் செயற்படுத்தப்பட்டு வாடிக்கையாளர் பாதுகாப்பினைத் தரமான மட்டத்தில் உறுதி செய்தல் போன்ற கடமைப் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்த திணைக்களத்தின் கலைப் பிரிவிற்குப் போதுமான அளவு பயிற்றப்பட்ட பதவியணியினர் மற்றும் பௌதிக வளங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகளை பொருத்தமாக நிறைவேற்றக் கூடிய வகையில் ஒழுங்கமைப்பினைத் தாபித்தல் வேண்டும். | கலைப்பிரிவில் காணப்படும் கோப்புகளின் எண்ணிக்கை நூல் குழுவிடம் சமர்ப்பிப்பதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள மருந்துகளின் மாதிரி தொகை மற்றும் பௌதிக வளங்களின் பாவனைக்கு போதியளவு இடம் காணப்படாமை காரணமாக கடமைகளை நிறைவேற்றுவதில் தாமதம் காணப்படுகின்றது என்பதும் மற்றும் இருக்கின்ற வளங்களை முகாமைத்துவப்படுத்தி நாளாந்த தேவைகளை இயலுமான வரையில் கூடுதலாக |

| | | | |
|---|---|---|---|
| | ஆயுர்வேதத்துடன் இணைந்த அரச அல்லது தனியார் நிறுவனங்கள் மற்றும் ஆயுர்வேத உற்பத்திகள் தொடர்பான அறிவுறுத்தல்களை போதுமான வகையில் நிறைவேற்றி வாடிக்கையாளர் பாதுகாப்பினை சிறந்த மட்டத்தில் உறுதி செய்வதற்கும் அது தடையாக இருந்தது. | | மேற்கொள்ளுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. |
| (ஊ) | ஆயுர்வேதத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் துறை ஆயுர்வேத சிகிச்சை மத்திய நிலையங்கள் பஞ்சகர்ம நிறுவனம், ஆயுர்வேத வைத்தியசாலை, உற்பத்திசாலைகள் மற்றும் விற்பனை நிலையங்கள் தொடர்பாகவும், நிறுவன மற்றும் உள்நாட்டு மருந்துகளுக்காகப் பதிதாகப் பதிவு செய்தல் மற்றும் அவற்றைப் புதுப்பித்தல்கள் தொடர்பாகவும், கணனித் தரவு ஒழுங்கமைப்பிணைத் தாபித்துப் பேணுவதற்கு 2020 செப்டெம்பர் 30ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் நிகழ்நிலை முறையில் (Online) பதிவு செய்தல் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளல் போன்ற முறைமைகளை அறிகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கலைபிரிவில் பதிவு செய்தல், அனுமதிப் பத்திரம் வழங்குதல் போன்ற செயல்களுக்குரிய அனைத்துத் தகவல்களும் உள்ளடங்கும் வகையில் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டினைக் கொண்ட கணனி ஒழுங்கமைப்பினைத் தாபித்து நடாத்திச் செல்லுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கலைப்பிரிவில் அனைத்து விடயங்கள் தொடர்பில் கணனித்தரவு ஒழுங்கமைப்பொன்றினைத் தயாரிக்க வேண்டும் எனினும் தற்போது காணப்படும் மனித மற்றும் பௌதிக வளங்களின் அளவு அதற்குப் போதுமானதாக இல்லை என்பதும், மற்றும் எதிர்காலத்தில் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்பதும். |
| (எ) | அதிகாரச்சட்டத்தின் 10ஆவது பிரிவில் குறிப்பிடப்படுள்ள பதிவு செய்யப்பட்ட வேண்டிய நிறுவனங்களின் கீழ் உரித்தாகத இயன்முறை நிறுவனத்தை (Spa) பதிவு செய்வதற்கு ஆயுர்வேதத் திணைக்களம் நடவடிக்கை | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்திருந்தது. ஆயினும் முறையாகத் தயாரிக்கப்பட்ட மூலப்பிரமாணங்களின் அடிப்படையில் அந்த இயன்முறை நிறுவனங்களை ஒழுங்குத்திருக்காத காரணத்தால் நீண்ட காலம் தொட்டு காணப்படும் இலங்கையின் ஆயுர்வேத வைத்திய நாமத்தினை வியாபாரிகள் வேறு தேவைகளுக்காக விற்பனைக்குட்படுத்தி இருந்தது. | | |
| (ஏ) | அதிகாரச்சட்டத்தின் 22 ஆவது பிரிவு தொடக்கம் 32ஆவது பிரிவு வரையிலான ஏற்பாடுகளின் கீழ் ஆயுர்வேத வைத்திய கல்லூரியுடன் இணைந்த ஆயுர்வேத போதனா வைத்தியசாலைக்கு, மருந்து உற்பத்திகளுக்கு மருந்து படிவுகளுக்கு மற்றும் மருந்து சாலைகளுக்கு உரியதான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஆயுர்வேதக் கல்வி மற்றும் மருத்துவமனை சபையினைத் தாபித்து இருந்தபோதிலும் அதிகாரச் சட்டத்தின் 30(ஓ) பிரிவின் பிரகாரம், ஆயுர்வேத வைத்திய கல்லூரியுடன் இணைந்த ஆயுர்வேத போதனா வைத்தியசாலைகின் நிர்வாகம் தொடர்பாக மற்றும் அனுமதிக்கப்படும் நோயாளர்களிடமிருந்து கட்டணம் அறவிடும் பரிந்துரையை பெற்றுக் கொடுத்தல் தொடர்பில் ஆரம்பம் தொடக்கம் அந்த சபையானது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் இணைத்துக் கொண்டிருக்கவில்லை. மேலும், அந்த சபையினால் | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - மேற்படி - |

2013 ஜுலை மாதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருந்த ‘‘வைத்தியசாலை முகாமைத்துவம்’’ எனும் நூல் வைத்தியசாலை ஒழுங்கமைப்பின் பதவியணி அமைப்பு, வைத்தியசாலை முகாமைத்துவம் எனும் நூல் வைத்தியசாலை ஒழுங்கமைப்பின் பதவியணி அமைப்பு, ஆயுர்வேத வைத்தியர்கள் உள்ளிட்ட ஏனைய பதவியணியினரின் தொழில் விபரங்கள், விபரக்குறிப்புகள் மற்றும் கடமை நேரங்களைக் குறிப்பிட்டு ஆயுர்வேத படிகம் 10 மற்றும் சுகாதார படிவம் 04 என்பவற்றை அறிமுகப்படுத்தி வெளியிடப்பட்டிருந்தது. ஆயினும் இந்த நூலில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளை அடிப்படையாகக் கொண்டு சுற்றறிகை மற்றும் வேறு சட்டரீதியான ஏற்பாடுகளுடன் சட்ட மூலங்கள் தயாரிக்கப்பட்டிருக்காததால் இந்த நூலினை சட்ட ரீதியான ஆவணமாகப் பயன்படுத்த முடியாது இருந்தது. ஆயினும், வைத்தியர்களின் வினைத்திறன் தடை பரீட்சைக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன் அது வைத்தியசாலைப் பணியாளர்களினால் வைத்தியசாலை நிர்வாகத்தின் போது பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஐ) அதிகாரச்சட்டத்தின் 33 ஆவது பிரிவு தொடக்கம் 41 ஆவது பிரிவு வரையிலான ஏற்பாடுகளின் பிரகாரம், 1963 ஆம் ஆண்டில் ஆயுர்வேத ஆராய்ச்சி செயற்குழுவொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன் அது ஆயுர்வேத வைத்திய ஆராய்ச்சி குழுவாக பின்னர் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| | ஆயுர்வேத ஆராய்ச்சி குழுவினால் நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்க்கப்பட்ட கீழே விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில கடமைகள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் ஒரு சில கடமைகள் நிறைவேற்றப்பட்டுள்ளமையை உறுதி செய்து கொள்வதற்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (i) | ஆயுர்வேத ஆராய்ச்சியொன்று மேற்கொள்ளுகையில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைமைகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை . | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - மேற்படி - |
| (ii) | 2019 ஆம் ஆண்டு வரையில் 06 ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைகள் தாபிக்கப்பட்டிருப்பினும், ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு அல்லது மேற்கொள்ளப்பட்ட புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பாக அல்லது அவை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தியமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | ஆயுர்வேத மற்றும் யுனானி மருத்துவக் கோவைகள் முறையே 1976 மற்றும் 1998 ஆகிய ஆண்டுகளில் இந்தக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆயினும் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துகளைத் தரப்படுத்தல், இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்துகளைக் கட்டுப்படுத்துதல், பிரசார விளம்பரங்கள் மூலம் சந்தைக்கு அனுபப்படும் பல்வேறு மாதிரிகளில் சந்தேகத்திற்கிடமான மருந்துகளை கட்டுப்படுத்துதல் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ஆயுர்வேத சிகிச்சைத் தொழிலில் ஈடுபட்டுள்ள வைத்தியர்களுக்கும் சிகிச்சை பெற்றுக் கொள்ளும் நோயாளர்களுக்கும், பாதுகாப்பினைக் பெற்றுக்கொடுத்தல் போன்ற ஆயுர்வேதத்தின் முன்னோக்கிய பயணத்திற்காக எடுக்கப்பட வேண்டியப பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள பங்களிப்பினை வழங்கும் இந்த மருத்துவக் கோவைகள் இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில் லை. | | |
| (iv) | சித்த மருத்துவக் கோவை இந்த அறிக்கைத் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (v) | மருந்துப் பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகளைத் தரப்படுத்துவதற்கு மற்றும் ஆயுர்வேத மருத்துவமனை சிகிச்சைகளுக்குரிய ஆயுர்வேத சிகிச்சை ஒழுங்கமைப்பிணைத் தரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஓ) | அதிகாரச்சட்டத்தின் 77ஆவது பிரிவின் பிரகாரம், ஆயுர்வேத மருத்துவ பயிற்சி மற்றும் அறுவைச் சிகிச்சை செயல்களுக்கு ஏதேனும் பொருட்கள் பண்டங்கள் அல்லது மருந்து உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், வழங்குதல், விநியோகித்தல் அல்லது தயாரித்தல், தடை செய்வதற்கு, ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது நிர்வாகம் செய்வதற்கு தேவையான கட்டளை வழங்குவதற்கு சட்டக் கோவையொன்றினைத் தயாரித்தல் வேண்டும். 2012 ஆம் ஆண்டில் உச்ச | -மேற்படி- | 226/2012 ஆம் இலக்க உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படும் அடிப்படை உரிமை வழக்கின் கட்டளை பிரகாரம் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் ஆயுர்வேத சட்டக் கோவையைத் தயாரிப்பிதற்கு நியமிக்கப்பட்ட குழுவினால் சட்டக்கோவை சட்டமூலமாக்கப்பட்டு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் மற்றும் 2018 ஆம் ஆண்டில் இதற்காக நியமிக்கப்பட்ட புதிய குழு சட்டமூலாக்கப்பட்ட சட்டகோவையை விசேட |

| | | |
|---|---|---|
| நீதிமன்றத்தினால் இடப்பட்ட கட்டளையின் அடிப்படையில் சட்டக் கோவையினைத் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டு 2017, 2018 ஆம் ஆண்டுகளில் அதற்காக ரூபா 564,580 செலவிடப்பட்டடிருந்த போதிலும் 2020 செப்டெம்பர் 30ஆம் திகதி வரையிலும் சட்டக்கோவையினைத் தயாரித்து சட்டமயப்படுத்துவதற்குத் தவறியிருந்தது. | | குழுவின் மூலம் மீளாய்வு செய்து மற்றும் குறைபாடுகளை தயார்படுத்தி பேணப்படும் என்பதும். |

3.2.2 1996 இன் 924/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக் கோவையின் ஒழுங்குகளுக்கு பொருத்தமான வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வெளிநோயாளர் பிரிவில் நோயாளர் 75 பேருக்கு ஒரு வைத்தியர் எனும் வகையிலும், தங்கியிருக்குப் பிரிவில் 35 கட்டில்களுக்கு ஒரு வைத்தியர் எனும் வகையிலும், மருந்து உற்பத்திப்பிரிவிற்கு அதன் நிர்வாகிக்கு 07 பிரிவுகளுக்கு ஒரு வைத்தியர் எனும் வகையிலும் சேவை பிரமாணக் குறிப்பில் 6.1.1 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மூலப்பிரமாணங்களின் அடிப்படையில் வைத்தியதுறையில் முதன்மை, இரண்டாம் மற்றும் முதலாம் தரங்களின் இணைந்த பதவிகளின் எண்ணிக்கையை காலத்திற்குக் காலம் தீர்மானித்தல் வேண்டும். அதற்கமைய சேவைப் பிரமாணக் குறிப்பில் 27 | 1996 இன் 924/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக் கோவையின் ஒழுங்குகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

ஆம் பிரிவின் பிரகாரம், மத்திய அரசின் மற்றும் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி ஆயுர்வேத நிறுவனங்களின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப ஒவ்வொரு அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளின் கீழ் தேவையான ஆயுர்வேத வைத்தியர்களின் எண்ணிக்கைக்கு அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஆயினும் ஆயுர்வேதத் திணைக்களத்தினால் வைத்தியசாலைகளில் அந்த 3 முக்கிய பிரிவுகளுக்கு மேற்கூறிய உவமையின் அடிப்படையில் தேவையான ஆயுர்வேத வைத்தியர்களின் பதவி எண்ணிக்கையை அறிந்து கொள்வதற்கும் மற்றும் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையில் வெளி, தங்கியிருக்கும் மற்றும் உற்பத்தி போன்ற பிரிவுகளுக்கு குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மூலப்பிரமாணங்களுக்கு ஏற்ப இருக்க வேண்டிய பொது ஆயுர்வேத வைத்தியர்களின் எண்ணிக்கை 32 பேராக இருப்பினும், 2019 செப்டெம்பர் 30ஆம் திகதி வரையிலும் அந்த மூன்று பிரிவுகளுக்கும் இணைக்கப்பட்டிருந்த பொது ஆயுர்வேத வைத்தியர்களின் எண்ணிக்கை 96 பேர் ஆகும். அந்த காரணத்தினால் பொது ஆயுர்வேத வைத்தியர்களில் 64

| | | | |
|---|---|---|---|
| | பேருக்கு சேவை பிரமாணக் குறிப்பிற்கு முரணாக மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | | |
| (ஆ) | சேவைப் பிரமாணக்குறிப்பில் 13.1.3 ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு தரத்திற்காகவும் சேவை முதுமை நிரலினைப் பேண வேண்டி இருந்த போதிலும் ஆரம்ப, இரண்டாம் மற்றும் முதலாம் தரங்களுக்கு சேவை முதுமை நிரல் பேணப்பட்டிருக்கவில்லை.<br><br>அவ்வாறே சேவைப் பிரமாணக் குறியில் 22 ஆவது பிரிவு தொடக்கம் 26ஆம் பிரிவு வரையான பிரிவுகளின் பிரகாரம், ஆயுர்வேத வைத்திய சேவையின் பதவி ஆராய்ச்சி மற்றும் கல்வி ஆகிய 03 தொகுதிகளிலும் அதி மற்றும் விசேட தரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப வருடாந்தம் பதவியுயர்வு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி- | மேற்படி- |
| (இ) | சேவைப் பிரமாணக் குறிப்பில் 10.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்சேர்ப்பு செயற்பாட்டு முறையில் குறியிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள பட்டதாரி வைத்தியர்கள், ஆயுர்வேத வைத்தியர்களின் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் எண்ணிக்கையினுள் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் செயலுக்காக ஆயுர்வேத, சித்த மற்றும் யுனானி என வெவ்வேறு வகையான 03 | 1996 இன் 924/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஒழுங்குகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். போதியளவு நோயாளர் தொகை ஆயுர்வேத சிகிச்சை பெற்றுக்கொள்ள வருகை தராதமையால் அனைத்து ஆயுர்வேத வைத்திய பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | தொகுதிகளுக்கு காத்திருப்பபுப் பட்டியல் பேணப்பட்டிருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியர் எண்ணிக்கையில் வெற்றிடமான எண்ணிக்கைக்காக மட்டும் காத்திருப்புப் பட்டியலின் வரிசைக்கிரமத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டி இருப்பினும், 2018 ஜனவரி மாத ஆரம்பத்தில் 180 மேலதிக வைத்தியர்களுடன் மொத்த வைத்தியர்கள் 650 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | கொடுக்க அரச ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கு கொள்திறன் இல்லாமையும், வைத்திய பட்டதாரிகளுக்கு மாற்று வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கக் கூடிய வகையில் கொள்ளை ரீதியிலான தீர்மானங்களை எடுப்பதற்கு உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லல் வேண்டும். | |
| (ஈ) | கோவைப் பிரமாணக்குறிப்பில் 6.1.1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மூலப்பிரமாணங்களுக்கு அமைய 2020 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையில் பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையில் மேலதிக வைத்தியர்கள் 64 பேர் இருக்கையில், எட்டு மாடிகளைக் கொண்ட புதிய கட்டிடத்தைப் பயன்படுத்தும் நோக்கில் அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களின் எண்ணிக்கையை 34 இனால் அதிகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும் 2020 நவம்பர் 30ஆம் திகதி வரையிலும் புதிய கட்டடம் நோயாளர் பராமரிப்பு சேவைக்காக திறக்கப்பட்டடிருக்கவில்லை. | 1996 இன் 924/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவை பிரமாணக் குறிப்பின் ஒழுங்குகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - மேற்படி - |
| (உ) | சேவைப் பிரமாணக்குறிப்பின் III ஆவது பின்னிணைப்பின் படி இலங்கை அரசு மற்றும் பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் | 1996 இன் 924/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவை பிரமாணக் | - மேற்படி - |

பட்டப்படிப்பினைப் பெற்று உரிய பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவசபையின் சான்றிதழையும் பெற்றுக் கொள்ளும் தகுதியின் அடிப்படையில் இரண்டாம் தரத்தின் ஆயுர்வேத வைத்தியர்கள் விசேட தரத்திற்கு பதவியுயர்த்தக் கூடியதாக இருந்தது. விசேட தரத்திற்கு பதவியுயர்த்தும் முறைமையினை திருத்தம் செய்யப்பட்டு 2014 ஒக்டோபர் 03 ஆம் திகதியின் 1882/50 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பிற்கு அமைய கண்டறியப்பட்ட 10 பிரிவுகளின் கீழ் உள்ள ஏதேனும் விடயம் தொடர்பாக இலங்கை அரச மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் 03 வருடங்களுக்குக் குறையாத முழு நேர பட்டபின் படிப்பு பாடநெறியினைக் கற்றல் வேண்டும். பின்னர் விடயத்திற்கு உரியதாக போதனாசிரிய வைத்தியர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் 02 வருடங்களுக்குக் குறையாத முழு நேர சிகிச்சை / ஆராய்ச்சிப் பயிற்சியினைப் பெற்றுக்கொண்டதன் பின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆயுர்வேத/சித்த/யுனானி பட்டப்பின் படிப்பு கல்வி சபையில் பதிவு குறிப்பில் III ஆவது பின்னிணைப்பு மற்றும் 2014 ஒக்டோபர் 03 ஆம் திகதியின் 1882/50 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பிற்கு அமைய ஆயுர்வேத வைத்திய நிபுணர்களை உருவாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

செய்யப்பட்ட சான்றிதழ்ழைப் பெற்றுக் கொண்ட் வைத்தியரொருவர் உரிய பிரிவில் விசேட வைத்தியராவார். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கண்டறியப்பட்டிருந்த 10 பிரிவுகளுக்கு ஆயுர்வேத வைத்திய நிபுணர் பதவி எண்ணிக்கையைத் தீர்மானித்து அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) பட்டப்பின் படிப்பு கல்வி சபை 2019 செப்டெம்பர் 30ஆம் திகதி வரையிலும் தவிர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2014 ஒக்டோபர் 03 ஆம் திகதியின் 1882/50 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பினை வழங்குவதற்கு முன்னர் நிபுணத்துவ தரத்திற்குப் பதவியுயர்வு பெற்றுக்கொண்டிருந்த வைத்தியர்கள் எந்த பிரிவிற்குரிய நிபுணத்துவத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர் எனபதனை உறுதி செய்து கொண்டிருக்காத போதும் அவர்கள் உடல், சிகிச்சை, சிறுவர், அறுவை சிகிச்சை, சாலாக்கிய போன்ற வகைகளில் நிபுணத்துவ துறைகளில் பெயரிடப்பட்டு பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையில் சிகிச்சை பிரிவுகளில் செயற்பட்டு வந்துள்ளனர்.

(iv) மேற்கூறிய காரணிகளுக்கு அமைய உரிய 10 பிரிகளின் கீழ் ஆயுர்வேத

| | | | |
|---|---|---|---|
| | வைத்திய நிபுணர்களை உருவாக்குவதற்கு ஆயுர்வேத திணைக்களம் தவறியுள்ளமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஊ) | நீண்ட காலமாக பொரளை வைத்தியசாலையில் போதனா மற்றும் சிகிச்சை நடவடிக்கைக்கு உள்நாட்டு வைத்திய நிறுவனத்தின் போதனாசிரிய வைத்தியர்கள் வருகை தந்துள்ளனர். இது தொடர்ந்தும் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | 2014 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட ஆயுர்வேத வைத்திய சேவைப் பிரமாணத்தின் குறிப்பு 03 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - மேற்படி - |
| (i) | 2014 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட ஆயுர்வேத வைத்திய சேவைப் பிரமாணக் குறிப்பின் 03 ஆவது குறிப்பின் பிரகாரம், தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்த பின்னர் பொரளை தேசிய வைத்தியக் கல்லூரியின் பரிந்துரையின் அடிப்படைய ஆயுர்வேத திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட போதனாசிரிய வைத்தியர்கள் போதனா மற்றும் சிகிச்சை நடவடிக்கைக்காக வைத்தியசாலைக்கு வரவழைக்கப்பட வேண்டி இருந்த போதிலும், அவ்விதமாக நியமிக்கப்பட்டிருக்காத போதனாசிரிய வைத்தியர்கள் அந்தச் செயற்பாடுகளுக்காக பொரளை ஆயுர்வேத வைத்தியக்கு வந்திருந்தனர். இது தொடர்பில் முறையான வேலைத் திட்டமொன்று கண்டறியப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவில் லை. | | - |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இந்தப் போதனாசிரிய வைத்தியர்கள் வைத்தியசாலையில் வெளி மற்றும் தங்கியிருக்கும் பிரிவுகளிலுள்ள நோயாளர் சிகிச்சை சேவை மற்றும் போதனா நடவடிக்கைகளில் பங்களிப்பு செய்திருந்த போதிலும் வைத்தியர்களின் வரவினை உறுதி செய்து கொள்ளுவதற்கு முறையான செயல் முறையொன்று வைத்தியசாலைக்கு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | | - |

3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2002 செப்டெம்பர் 12 ஆம் திகதியினை 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், ஆயர்வேதத் திணைக்களத்தினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வு ஆண்டுக்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டியதாக இருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2020 செப்டெம்பர் 30ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச நிதிச் சுற்றிக்கையின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை குறித்த தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றுகை அறிக்கைக்குத் திணைக்களத்தின் நிர்வாக மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவின் 4 செயற்பாடுகளின் செயல் முன்னேற்றங்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்ததுடன் நிர்வாக மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவு, கலைப்பிரிவு, பரீட்சைப்பிரிவு மற்றும் அபிவிருத்திப் பிரிவுகளுக்கு | அந்தந்த பிரிவுகளுக்குக் குறிக்கப்பட்ட கடமைப் பொறுப்புகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி முடியுமான வகையில் செயலாற்றுகை | எதிர்காலத்தில் அனைத்துப் பிரிவுகளினதும் செயலாற்றுகையும் மதிப்பீட்டிற்கு உட்படும் வகையில் அறிக்கைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. |

| | | |
|---|---|---|
| ஒப்படைக்கப்பட்டிருந்த செயற்பாடுகளின் வருட ஆரம்பத் தினத்தில் இருந்த அளவு, வருடத்தினுள் ஒப்படைக்கப்பட்ட அளவு, வருடத்தினுள் நிறைவேற்றப்பட்ட அளவு மற்றும் வருட இறுதியில் மீதி அளவு என்பவற்றைக் குறிப்பிட்டு செயல் முன்னேற்றத்தினைச் சமர்ப்பித்திருக்காததுடன் அந்தப் பிரிவுகளின் செயலாற்றுகையை மதிப்பீட்டிற்கும் உட்படுத்த முடியாதிருந்தது. மேலும் நிர்மாணப் பணிகள் தொடர்பான தகவல்களின் தொடர்ச்சியானது, புதிய மற்றும் கைவிடப்பட்ட செயற்றிட்டம் என வகைப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும். | |

3.4 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், பிணை வைக்க வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களாலும் பிணை வைக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளப்படாததுடன் நிதிப்பிரமாணம் 891 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், பிணை தேவைப்படுகின்ற வைத்தியசாலைப் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், பிரிவுப் பிரதான வைத்தியர்கள் மற்றும் களஞ்சியசாலைப் பொறுப்பாளர்கள் போன்றோர்களான வைத்தியசாலைப் பதவியணியினர் உள்ளிட்ட அனைத்து உத்தியோகத்தர்களினதும் பெயர்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 891 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்குத் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. |

3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

3.5.1 மீனமாதா உடன்படிக்கை

| கணக்காய்வு அவதானிப்புகள் | சிபாரிசுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டில் பாதரசப் பண்ணையில் இருந்து முற்றாக விலகிக் கொள்வதற்கு இலங்கை பங்களிப்பாளராக மீனமாதா எனும் பெயருடைய சர்வதேச உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு இருந்த போதிலும், ஆயுர்வேத மருந்து உற்பத்தியில் பாதரசப் பாவனைக்குப் பதிலாக மாற்று நடைமுறையினைக் கண்டறிவதிலுள்ள திறன் தொடர்பில் தேடிப் பார்ப்பதற்கு மற்றும் அரச மற்றும் தனியார் துறைகள் ஆயுர்வேத மருந்து உற்பத்தியில் பாதரசப் பாவனையில் குறித்த மாத்திரையைப் பேணுகின்றதா என்பதனை உறுதி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆயுர்வேத மருந்து உற்பத்தியில் பாதரசப் பாவனைக்குப் பதிலாக மாற்று நடைமுறையினை கண்டறிவதற்கு உள்ள திறன் தொடர்பில் தேடியறிவதற்கு மற்றும் ஆயுர்வேத மருந்து உற்பத்தியில் பாதரச பாவனையில் குறித்த மாத்திரை பேணப்படுகின்றதா என்பதனை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு நுகர்வோர் பாதுகாப்பினை உறுதி செய்தல் வேண்டும். | ஆயுர்வேத மருந்து உற்பத்தியில் பாதரசம் முக்கியமானதாக உள்ளதுடன் மாற்று பொருள் இல்லை என்பதும், ஒழுங்குபடுத்தல் குழுவின் அனுமதிக்கு முன்னரே பாதரசத்தின் சரியான மாத்திரையளவு தொடர்பில் பரீட்சிப்பு செய்யப்படும் என்பதும், சந்தை மற்றும் அரச வைத்தியசாலைகளில் எழுந்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மருந்துகளில் அடங்கியுள்ள பாதரச மாத்திரை அளவு தொடர்பில் பரிசோதனை அறிக்கையினைப் பெற்றுக் கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும். |

3.5.2 ஒழுங்குபடுத்தல் குழுவின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளப்படாத மருந்துப்பட்டியல்களுக்கமைய மருந்துகளை உற்பத்தி செய்தல்.

| கணக்காய்வு அவதானிப்புகள் | சிபாரிசுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| போரளை ஆயுர்வேத வைத்தியசாலையில் உற்பத்தி செய்யப்படும் 326 மருந்து வகைகளில் 143 மருந்து வகைகள் ஆயுர்வேத யுனானி மருந்து விதக் கோவையில் குறிப்பிடப்பட்டிருக்காத பட்டியலுக்கமைய உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் அந்த பட்டியலுக்கு ஒழுங்குபடுத்தல் குழுவின் அனுமதியும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ நூலில் இல்லாத மருந்து வகைகள் உற்பத்திக்கு முன்னரே ஒழுங்குபடுத்தல் குழுவின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மருந்து வகைகளின் உற்பத்திக்கு ஒழுங்குபடுத்தல் குழுவின் மற்றும் ஒழுக்கவியல் (ERC) குழுவின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும். |

3.5.3 ஆயர்வேத திணைக்களத்தினால் உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்துகளைக் கொள்முதல் செய்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சிபாரிசுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆயர்வேதத் திணைக்களத்தினால் உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்து கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர், திணைக்களத்தின் மூலிகைப் பூங்காக்கள் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய மருந்துகளின் தொகையினைக் கருத்திற் கொள்ளப்பட்டிருக்காததால் அந்த மூலிகைப் பூங்காக்களில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த 18 வகையான உலர்த்தப்படாத மருந்துகள் 2,194 கிலோகிராமும் மற்றும் 8 வகையான உலர்த்திய மருந்துகள் 1,447 கிலோகிராமும் மீளாய்வு ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த மருந்துகள் மூலிகை பூங்காக்கள் மூலமாக பெற்றுக் | வைத்தியசாலைகளில் உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்துகளின் தேவைப்பாட்டில் மூலிகைப் பூங்காக்கள் உள்ளிட்ட உள்நாட்டில் பெற்றுக் கொள்ளக்கூடிய மருந்துத் தொகையினை அதிகரித்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். அவ்வாறே மூலிகைப் பூங்காக்கள் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய தொகையினைக் கவனத்திற் கொண்டதன் பின்பு மிகுதி தேவைப்பாட்டிற்காக மட்டும் கொள்முதல் நடவடிக்கையினை மேற்கொண்டு எல்லைக்குட்பட்ட நிதியினை உற்பத்தித் திறனாக செலவிடல் வெண்டும். | அந்தந்த வருட இறுதியில் அனைத்து வைத்தியசாலைகளிலும் வருடாந்த தேவைப்பாடுகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றது என்பது, மூலிகைப் பூங்காக்கள் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய மருந்துகள் தொடர்பான தகவல்கள் விநியோகப் பிரிவிற்கு கிடைத்திருக்காததால் அதற்கமைய கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும் மற்றும் 2021 ஆம் ஆண்டில் மூலிகைப் பூங்காக்களினால் விநியோகிக்கக்கூடிய உலர்ந்த மருந்துகள் தொடர்பான விபரங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்படாது வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு முறையே ரூபா 391,070 மற்றும் ரூபா 326,182 செலவிடப்பட்டிருந்தது. | | விநியோகப்பரிவிற்கு கிடைத்துள்ளமையால் மிகுதித் தொகையினைக் கொள்முதல் செயல்முறையைப் பின்பற்றி கொள்வனவு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. |
| (ஆ) | ஆயர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தினால் உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்துக்கள் பெற்றுக் கொள்ளும் விலையினை விட அதிக விலைக்கு அந்த உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்துகள் பொரளை ஆயர்வேத வைத்தியசாலைக்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அந்த வழங்குனர்களிடமிருந்தே பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட உலர்த்தப்படாத 20 மருந்து வகைகளில் 19 வகைகளின் விலை 25 சதவீதம் தொடக்கம் 537 சதவீதம் வரையான வீச்சிலும், உலர்த்திய 10 மருந்து வகைகளில் 06 வகைகளின் விலை 10 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சிலும் ஆயர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தில் கொள்வனவு செய்யப்பட்ட விலையினை விட அதிகமாகக் காணப்பட்டது. | உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்துகளின் மொத்த செலவினைக் குறைக்கும் வகையில் வழங்குனர்களைத் தெரிவு செய்வதற்கு கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். | இலங்கை ஆயர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தில் உலர்த்திய மருந்துகள் தொடர்பாக விலை கோரி பல தடவைகள் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் அதற்கான பதில் வழங்கப்படவில்லை என்பது மற்றும் வைத்தியசாலைகளிலிருந்து அனுப்பப்படும் வருடாந்த தேவைப்பாடு மற்றும் வழங்குனர்களிடமிருந்து கிடைக்கும் விலைகளை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடம் ஒப்படைத்து கொள்முதல் அனுமதியின் அடிப்படையில் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படும் என்பது. |

3.5.4 ஆயுர்வேதத் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் விரல் அடையாள இயந்திரங்களின் பாவனை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2011 மே மாதத்தில் ரூபா 381,200 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த விரல் அடையாள இயந்திரங்களில் 06 இயந்திரங்களின் அறிக்கை வருகை மற்றும் வெளியேறலை உறுதி செய்வதற்கு | அனைத்து அரச ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேறல் விரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அந்த உறுதிப்படுத்தலின் அடிப்படையில் மேலதிக நேரக் | கொள்வனவு செய்யப்பட்ட விரல் அடையாள இயந்திரங்கள் அனைத்தும் பாவனையில் உள்ளது என்பதும் மற்றும் 2009.04.16 ஆம் திகதியின் 09/2009 ஆம் இலக்க |

| | | |
|---|---|---|
| பயன்பட்டிருக்கவில்லை. ஆயர்வேதத் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள 18 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் ஊழியர்களின் விரல் அடையாளங்களை இயந்திரங்கள் மூலம் உறுதி செய்யப்படாத காலத்தினை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தின சம்பளமாக 2019 ஆம் ஆண்டில் மட்டும் ரூபா 45,852,415 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கொடுப்பனவு மற்றும் விடுமுறை தினச் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுத்தல். கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு நிதிப் பிரமாணம் 128(1)(ஐ) இன் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதன் கீழ் உரித்தாகுவதால் அதற்கமைய நடவடிக்கை எடுப்பதற்கு பொறுப்பேற்றல் வேண்டும். | அரச நிர்வாகச் சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கு விரல் அடையாள இயந்திரங்கள் மேலும் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால் கொள்வனவு செய்து பொருத்தப்பட்டவுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

3.5.5 ஆயுர்வேதத் துறையில் நாடளாவிய ரீதியில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்குதல்

---

| கணக்காய்வு அவதானிப்புகள் | சிபாரிசுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 6 துறைகளின் கீழ் பயிற்சி வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டு மத்திய அரசின், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் நாடளாவிய ரீதியில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆயுர்வேதத் துறை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியினை வழங்குவதைப் பிரதான நோக்காகக் கொண்டு உள்நாட்டு வைத்திய முறைகள் தொடர்பான தேசிய நிறுவனம் தாபிக்கப்பட்டிருந்தது. ஆயினும் பயிற்சியினை வழங்கவதற்கு குறித்த நாடளாவிய ரீதியில் ஆயுர்வேதத் துறையில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் தகவல்கள் உள்ளிட்ட கணணித் தரவு ஒழுங்கமைப்பொன்றைத் தாபித்து பேணப்படாத காரணத்தால் மீளாய்வு ஆண்டில் முறையான திட்டத்திற்கமைய உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்காக பயிற்சி அளிக்கப்பட | உள்நாட்டு வைத்திய முறைகள் தொடர்பான தேசிய நிறுவனத்தின் மூலம் பயிற்சியினை வழங்குவதற்கு குறித்த நாடளாவிய ரீதியில் ஆயுர்வேதத் துறையில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் தகவல்கள் உள்ளிட்ட கணிணி தரவு ஒழுங்கமைப்பொன்றைத் தாபித்து முறையான திட்டமொன்றிற்கு அமைய பயிற்சியினை நடாத்தி ஆயுர்வேதத் துறையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் மூலம் பெற்றுக் கொடுக்கும் நோயாளர் பராமரிப்பு சேவையின் தரத்தினை மேம்படுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

வேண்டிய உத்தியோகத்தர்களின் பெயர்களை நிறுவனத் தலைவர்களிடம் கேட்டிருந்ததுடன் அவர்களின் விருப்பின் பெயரில் உத்தியோகத்தர்களின் பெயர்கள் பயிற்சிக்காக அனுப்பப்பட்டிருந்தது.

3.5.6 பொரளை ஆயர்வேதத் போதனா வைத்தியசாலைக்கு உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்துகளைப் பெற்றுக் கொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சிபாரிசுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொரளை ஆயர்வேதத் போதனா வைத்தியசாலைக்கு 2019 ஆம் ஆண்டில் உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்துகள் வழங்கும் ஒப்பந்தத்தை 2019 ஏப்பிரல் மாதத்தில் தாமதமாக ஒப்படைக்கப்பட்ட காரணத்தினால் உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்துகளைத் தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்துள்ளது. 2018 முதல் அரை ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 முதல் அரை ஆண்டில் க்வாத மற்றும் கஷாய பிரிவின் உற்பத்தி 10,829 போத்தல்களினாலும், பாதரச பிரிவின் உற்பத்தி 60 கிலோகிராமினாலும் தைல பிரிவின் உற்பத்தி 297 போத்தல்களினாலும் குகுள் பிரிவின் உற்பத்தி 140 கிலோ கிராமினாலும் குறைவதற்கு அதுவும் காரணமாக இருந்தது. | மருந்து உற்பத்தியினைத் தட்டுப்பாடின்றி பேணுவதற்கு உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்துகளைப் பெற்றுக்கொள்ளும் கொள்முதல் நடவடிக்கை குறித்த நேரத்தில் மேற்கொள்ளப்பட்டு மருந்து உற்பத்தியினைத் தொடர்ச்சியாக பேணப்படுதல் வேண்டும். | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை கிடைப்பதில் தாமதம் மற்றும் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு அங்கீகரிக்கப்படுவதிலுள்ள தாமதம் காரணமாக ஒப்பந்தம் 2019 ஏப்பிரல் மாதத்தில் ஒப்படைக்கப்பட்டது என்பது. |
| (ஆ) | பொரளை ஆயர்வேத வைத்தியசாலையினால் ஒவ்வொரு மருந்து பட்டியலுக்கமைய உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்து | உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்து களஞ்சியசாலை மற்றும் பிரதான தயாரிக்கப்பட்ட மருந்து களஞ்சியசாலை உள்ளிட்ட ஏனைய | கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு முதல் வைத்தியசாலைகளிலிருந்து எதிர்வரும் வருடத்திற்கான தேவைப்பாட்டினை கேட்டறியப்படும் என்பதும் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படாத காரணத்தினால் ஒரு மருந்து பட்டியலுக்கு தேவையான உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்துகளை வழங்குனர்கள் பலரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. பட்டியலுக்குத் தேவையான மருந்து வழங்குனர்களினால் சரியான நேரத்திற்கு வழங்கப்படாத காரணத்தினால் மருந்து உற்பத்தி நடவடிக்கையைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியாதிருந்தது. அதன் காரணமாக போதனா வைத்தியசாலையினுள் அத்தியாவசியமாக இருக்க வேண்டியவை எனக் கண்டறியப்பட்ட 69 வகையான மருந்து வகைகளில் 15 மருந்து வகைகள் 2019 முதல் அரை ஆண்டில் 10 நாட்கள் தொடக்கம் 60 நாட்களுக்கு இடையிலும், 25 மருந்து வகைகள் 60 நாட்கள் தொடக்கம் 120 நாட்களைக் கடந்த கால எல்லைக்கள் தட்டுப்பாடாக இருந்தது. | மருந்தகத்திற்கு இருப்பு மட்ட முறையைப் பயன்படுத்தி மருந்துகளுக்கான கட்டளை அனுப்புதல், உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்துகளின் கொள்முதல் நடவடிக்கை சரியான நேரத்தில் மேற்கொள்ளுதல் மற்றும் மருந்துப் பட்டியலுக்குத் தேவையான உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒழுங்கதன முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதன் மூலம் மற்றும் சரியான உற்பத்தித் திட்டத்திற்கு அமைய உற்பத்தி செய்தல் மூலம் மருந்து உற்பத்தியினைத் தட்டுப்பாடின்றி பேணிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மற்றும் ஒவ்வொரு மருந்துகளையும் வேறுவேறாக அனுப்பப்பட வேண்டும் எனும் பட்டியல் முறையைப் பின்பற்றப்பட மாட்டாது என்பது |
| (இ) | பொரளை ஆயர்வேத வைத்தியசாலையில் உலர்த்திய மருந்து களஞ்சியசாலை, தயாரித்து முடிக்கப்பட்ட மருந்து களஞ்சியசாலை, உற்பத்திச்சாலைப் பிரிவு, உள்ளக மற்றும் வெளி மருந்தகம், அடுக்களை போன்ற வகையில் அந்தந்த பிரிவுகளில் காணப்படும் நிறுத்தல் அளவை உபகரணங்களைப் பயன்படுத்தி உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மற்றும் தயாரித்து முடிக்கப்பட்ட மருந்துப் பொருட்களை விநியோகித்தல், பொறுப்பேற்றல், கொள்கலனிடல் போன்ற வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது எனினும் வருடாந்தம் அந்த நிறுத்தல் | வைத்தியசாலையில் காணப்படும் அனைத்து நிறுத்தல் அளவை உபகரணங்களும் வருடாந்தம் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது வைத்தியசாலையினுள் காணப்படும் நிறுத்தல் அளவை உபகரணங்களில் அளவை குறைபாடு காணப்படுவதாக பயன்படுத்திய எந்தப் பிரிவிலிருந்தும் குறைபாடு கிடைக்கவில்லை என்பதும், ஆயினும் நிறுத்தல் அளவைத் திணைக்களத்தடன் கலந்துரையாடி உரிய உபகரணங்களுக்கு வருடாந்த அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும். |

அளவை உபகரணங்களுக்கு அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.5.7 பொரளை ஆயர்வேத வைத்தியசாலையினால் உற்பத்தி செய்யப்படும் முடிவற்ற மருந்துகள்
---

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொரளை ஆயர்வேத வைத்தியசாலையின் உற்பத்திசாலையினால் உற்பத்தி செய்யப்படும் முடிவற்ற மருந்துகளின் தொகுதி இலக்கம், தயாரிக்கப்பட்ட திகதி மற்றும் காலாவதியாகும் திகதி என்பன குறிப்பிடப்பட்டிருக்காததுடன் மருந்து களஞ்சியசாலைப் பொறுப்பாளரின் மற்றும் மருந்தாளரின் அறிவிற்கேற்ப மருந்துகளின் நிறுத்தல் மற்றும் இயல்பில் மாற்றம் எற்பட்டவுடன் காலாவதியான மருந்தாக அறிந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. வெளி நிறுவனங்களில் கொள்வனவு செய்யப்பட்டு வைத்தியசாலையின் உள்ளக மருந்தகத்திற்கு விநியோகிக்கப்பட்டதன் பின்னர் 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் காலாவதியாகியிருந்த தைலம் மற்றும் கஷாயம் 04 போத்தல்கள் நோயாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தமை 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது வெளிக்கொணரப்பட்டது. | உற்பத்தி செய்யப்படும் அனைத்து மருந்து வகைகளிலும் மருந்தின் தொகுதி இலக்கம், உற்பத்தித் திகதி மற்றும் காலாவதியாகும் திகதி என்பன குறிப்பிடப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் காலாவதியான மருந்துப் பாவனை இடம்பெறாத வகையில் முறைமையொன்றினை தாபித்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

3.5.8 பொரளை ஆயர்வேத வைத்தியசாலையினால் உற்பத்தி செய்யப்படும் முடிவற்ற மருந்துகளின் மொத்தச் செலவு

---

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையில் மருந்து பட்டியலொன்று முடிவற்ற மருந்தாக மாற்றப்படும். உற்பத்திப் பிரிவிலுள்ள ஒவ்வொரு பிரிவின் மூலமும் சேர்க்கப்படும் மூலப் பொருட்கள், சக்தி மற்றும் இயந்திர மணித்தியாலத்தின் மொத்த செலவினைக் கணக்கெடுக்காமையும், இந்த செயன்முறைகளுக்கு இடையில் அந்தந்த பிரிவுகளில் எற்படக் கூடிய சாதாரண கழிவுகளை தரப்படுத்தி இருக்காமையும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அசாதாரணக் கழிவாகும் எனில் அதைக் கண்டறிவதற்கு, குறைப்பதற்கு மற்றும் பரிகாரம் செய்வதற்கு முறைமையொன்று கண்டறியப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக உற்பத்திசாலையில் அந்தந்த பிரிவுகளின் மருந்து உற்பத்தியில் வழங்கும் பங்களிப்பின் செயலாற்றுகையை அறிந்து கொள்ள முடியாதிருந்தது. அவ்வாறே தயாரிக்கப்படும் மருந்துகளின் மொத்த செலவினைக் கணக்கிடுவதற்கு முடியாது இருந்ததுடன் பணம் செலுத்தும் வாட்டிலுள்ள நோயாளர்களுக்கு வழங்கும் மருந்துகளின் உண்மையான பெறுமதியை அறவிடாது கூட்டுத்தாபனத்தில் பெறப்பட்ட விலைக்கு ஏற்ப பணம் அறவிடப்பட்டிருந்தது. | மருந்து உற்பத்திச் செயன்முறையில் ஏற்படும் சாதாரண கழிவினைத் தரப்படுத்தி கட்டுப்பாடு செய்யவும், அசாதாரண கழிவுகளைக் குறைத்துக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மருந்துகளின் மொத்த செலவினை அறிந்து கொள்ளும் முறைமை ஒன்றினை அறிமுகப்படுத்தி அதற்கமைய பணம் செலுத்தும் வாட்டுகளில் பயன்படுத்தப்படும் மருந்துகளின் உண்மையான மொத்த செலவினை அறிந்து கொண்டு பணம் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மூலப் பொருட்களைச் சுத்தப்படுத்துதலின், கழுவுதலின், உலர்துதலின் மற்றும் துண்டாக்குதலின் பின்னர் மருந்து உற்பத்தி செய்யும் செயற்பாட்டுக்கு உண்மையில் தேவைப்படும் அளவினை மட்டும் களஞ்சியசாலை ஊடாகப் பெற்றுக்கொள்ளுதல் என்பதும் மூலப் பொருட்களில் காலநிலை மற்றும் வானிலை நிலைமைகள் தாக்கம் புரிகின்றன என்பதும் களஞ்சியப்படுத்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் தாக்கம் புரிகின்றது என்பதும் அந்தக் காரணிகளைக் கவனத்திற் கொண்டு உற்பத்தித் தேவைப்பாடு கேட்கப்படுகின்றமையால் சுயமாகவே கழிவுகள் தொடர்பாகக் கவனமெடுக்கப்படும் என்பதும் ஏதேனும் ஒரு மூலப் பொருளில் கழிவு கண்டறியப்பட்டால் விசேடமாக ஆயர்வேத மூலப் பொருட்களுக்கு சரியான அளவிலான கழிவாக கணித்தல் கடினமானது என்பதும் எனினும் திரவ சார்பான கஷாயம் போன்ற மருந்துகள் உற்பத்திச் சாலையில் முன் தயாரிப்புப் பிரிவின் மூலம் கழிவுகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் பணம் செலுத்தும் |

| | | | |
|---|---|---|---|
| | | | வாட்டு நோயாளர்களுக்கு வழங்கும் மருந்துகளின் உண்மையான பெறுமதியை அறிந்து கொள்ளும் நோக்கிலும், முடிவற்ற மருந்துகளின் மொத்த செலவைக் கணக்கிடும் நோக்கிலும் மருந்தினை உற்பத்தி செய்யும் பொருட்டு தேவையான மூலப்பொருட்கள், சக்தி, மின்சாரம், இயந்திரங்கள், அச்சிடல் நடவடிக்கை, கழிவு, சேதாரம், குணம் மற்றும் தரம் போன்ற நடவடிக்கை தொடர்பாகக் கவனத்திற் கொண்டு முறைமையொன்றினைத் தயாரிக்க துறை தொடர்பில் முழு அளவினைக் கொண்ட பதவியணியினர், இயந்திரக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வைத்தியசாலையில் காணப்படாமை என்பதும். |

### 3.5.9 பொரளை ஆயர்வேத வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பராமரிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நோயாளர் சிகிச்சை வழங்குகையில் முறையான பயிற்சியினைப் பெற்ற ஆயுர்வேத வைத்தியருக்கு ஆயுர்வேத சிகிச்சை ஒழுங்கமைப்பில் பல்வேறு கடமைப் பொறுப்புகள் ஒப்படைக்கப்படுகின்றமையால் அந்தக் கடமைப் பொறுப்புகளை வேறு ஒருவருக்கு வழங்க முடியாது எனினும் ஆயுர்வேத சிகிச்சை ஒழுங்கமைப்பில் பல்வேறு | ஆயுர்வேத சிகிச்சை ஒழுங்கமைப்பினுள் ஆயுர்வேத வைத்தியருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகளில் தாதியர், இயன்முறையாளர், பராமரிப்பாளர் போன்ற ஏனைய பதவியணியினருக்கு ஒப்படைக்கப்பட்ட பகுதிகள் தொடர்பில் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்தந்த தரப்பினருக்கு சிகிச்சை ஒழுங்கமைப்பில் பிரித்து | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | பகுதிகள் ஆயுர்வேத வைத்தியர்களால் சிற்றூழியர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த நிலைமை காரணமாக ஆயுர்வேத சிகிச்சை ஒழுங்கமைப்பு மேற்கத்திய வைத்திய சிகிச்சை வடிவமைப்பினைப் பெற்றுள்ளதுடன் வைத்தியசாலைகளுக்கு இணைக்கப்பட்டுள்ள பாரம்பரிய விசேட வைத்தியர்களினால் ஆயுர்வேத சிகிச்சை ஒழுங்கமைப்பில் அனைத்து வேலைகளும் நிறைவேற்றப்படுகின்றமையால் நோயாளர்கள் அது தொடர்பில் கவரக்கூடியதான போக்கில் காணப்படுகின்றனர். | கொடுக்கப்பட்ட பகுதிகளைத் தீர்மானித்து தரப்படுத்திய பின்னர் ஆயுர்வேத வைத்தியர்கள் மற்றும் ஏனைய பதவியணியினர் இடையே கடமைப் பொறுப்புகளை ஒப்படைத்தல் வேண்டும். | |
| (ஆ) | பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையில் வெளி மருந்தகம் மற்றும் உள்ளக மருந்தகம் மூலம் வெளிநோயாளர்களுக்கு சல்பம், உருண்டை, தைலம், சூரணம், கஷாயம், மருந்துப் பாகு, க்வாத போன்ற மருந்துப் பொருட்களின் கீழ் விநியோகிக்கப்படும் மருந்து வகைகளின் பெயர் மற்றும் பாவிக்க வேண்டிய குறித்த மாத்திரை குறிப்பிடப்பட்ட எழுத்து மூல அறிவுறுத்தல்கள் நோயாளர்களுக்கு வழங்கப்படாது வாய்மொழி மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதாகவும், வெளியார் பிரிவில் வரையறுக்கப்பட்ட வைத்தியர்கள் மட்டும் மருந்து பாவிக்கும் முறையினை கடதாசியில் குறித்து நோயாளர்களுக்கு வழங்குகின்றனர். எனினும் பெரும்பாலான வைத்தியர்கள் அவ்வாறு செய்வதில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. அதனால் ஆயுர்வேத சிகிச்சை | நோயாளர்களுக்கு மருந்து பாவனை முறை தொடர்பாக எழுத்து மூல அறிவுறுத்தல் வழங்க தேவையான நடைமுறையினை எடுத்தல் வேண்டும். | நோயாளர்களுக்கு மருந்தின் பெயர் மற்றும் மாத்திரை தொடர்பான அறிவுறுத்தல்களை எழுத்து மூலம் வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது, நோயாளர்களுக்கு வழங்கப்படும் தண்ணீர், வெந்நீர், தேன் மற்றும் தேங்காய்ப்பூ கீரை நீர் போன்ற குடிபான வகைகளும், புகை வகைகளைப் பிடித்தலையும் விதிக்கப்பட்ட போதிலும் அந்த நடவடிக்கை எழுத்து மூலம் நோயாளர்களுக்கு தெரிவித்தல் நடைமுறையில் சாத்தியப்படாது என்பது மற்றும் செவிமடுத்தல் குறை, பார்வைக் குறை போன்ற நோயாளர்கள் மற்றும் வயதான நோயளர்கள் போன்று |

| | | |
|---|---|---|
| பெற்றுக்கொள்ள விழைந்துள்ள பெரும்பாலானோரில் வயதான நோயளர்கள் உள்ளிட்ட அனைத்து நோயாளர்களும் சரியான மருந்து மாத்திரை அளவினைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பதைத் தீர்மானிக்க முடியாதிருந்தது. இதற்காகப் பொருத்தமான படிவம் ஒன்றுடன் சரியான முறையினை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | புத்தி சுவாதீனமற்ற நோயாளர்களும் வைத்தியர் போன்றே பதவியணியினரில் அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் தெளிவுபடுத்தல் செய்யப்படும் என்பது. |

3.5.10 பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு வெளிநோயாளர் பிரிவு மற்றும் தங்கியிருக்கும் பிரிவின் பங்களிப்பு

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநோயாளர் பிரிவிற்கு 61 ஆயுர்வேத வைத்தியர்கள் மற்றும் 83 ஏனைய பதவியணியினரும், தங்கியிருக்கும் பிரிவிற்கு 45 ஆயுர்வேத வைத்தியர்கள் மற்றும் 114 ஏனைய பதவியணியினரும் இணைக்கப்பட்டிருந்தனர். 2019 செப்டெம்பர் மாதத்தில் நோயாளர் எண்ணிக்கைத் தரவின்படி, வெளிநோயாளர் பிரிவில் சாதாரணமாக ஒரு நாளைக்கு 493 நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்ற போதிலும் தங்கியிருக்கும் பிரிவில் 13 வாட்டுகளின் கீழ் 181 சட்டங்களில் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. அதன் அடிப்படையில் அந்த இரு பிரிவுகளிலும் வேறு வேறாக பதவியணியினரை ஈடுபடுத்தி சிகிச்சை | ஆயுர்வேத வைத்திய சேவையில் சேவைப் பிரமாணக் குறிப்பின் மூலம் பிரமாணங்கள் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களின் எண்ணிக்கை நோயாளர்கள் பராமரிப்பிற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆயுர்வேத வைத்தியர்கள் உள்ளிட்ட ஏனைய பதவியணியினர்ன் செயலாற்றுகையை உயர்த்துவதற்கு தேவையான முறைமைகளைத் தாபித்து வெளி மற்றும் தங்கியிருக்கும் பிரிவுகளின் நோயாளர் பராமரிப்பு சேவைகளின் தரத்தினை | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பினும் அந்த இரு பிரிவுகளிடையே உள்ளக தொடர்பு ஏற்படும் வகையில் சிகிச்சை பிரிவு, கிளினிக் மற்றும் வாட்டுகள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த காரணத்தினால் நோயாளர் பராமரிப்பு நடவடிக்கைக்கு ஆயுர்வேத வைத்தியர்கள் உள்ளிட்ட வைத்தியசாலை பதவியணியினர் குறை பயன்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | உயர்த்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (ஆ) | விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்பட்ட திட்டத்திற்கமைய மற்றும் ஒழுங்கான முறைமைக்கு வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பிரிவு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. ஆயுர்வேத வைத்தியர்களின் தற்றுணிவின் பேரில் ஆயுர்வேத, சித்த, யுனானி ஆகிய 3 துறைகளின் கீழேயே உடல் சிகிச்சை, சரும, மூட்டு நோய், நீரிழிவு எனும் வகையில் சாதாரண சிகிச்சை அலகும், யுனானி (போதனா), யுனானி (விசேட) சிகிச்சை அலகு, உடல் சிகிச்சை (போதனா), உடல் சிகிச்சை (நிபுணத்துவ), உடல் சிகிச்சை (சரும நோய்), நிபுணத்துவர் எனும் வகையில் பல்வேறு பெயர்களின் கீழ் எவ்வித ஆதாரமற்ற வகையில் விசேட சிகிச்சை அலகும், ஒரு பெயரின் கீழ் பல்வேறு சிகிச்சை அலகுகள் எனும் வகையில் 47 சிகிச்சை அலகுகளின் கீழ் நோயாளர் பராமரிப்பு சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பொரளை ஆயுர்வேத வைத்தியசாலை ஆயுர்வேதத்திற்கான போதனா நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பிரதானமான ஒரு வைத்தியசாலையாக இருப்பினும், 61 ஆயுர்வேத வைத்தியர்கள் இணைக்கப்பட்டுள்ள வெளிநோயாளர்கள் பிரிவு 24 மணி நேரமும் செயற்படும் வகையில் சிகிச்சைப் பிரிவு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக அரச சேவை நாட்களில் பிற்பகல் 6.00 மணியின் பின்னரும் சனிக்கிழமை பிற்பகல் 12.00 மணியின் பின்னரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.00 மணியன் பின்னரும் மற்றும் அரச பொது விடுமுறை தினங்களிலும் வெளிநோயாளர் பிரிவினை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | வைத்தியசாலையினுள் 24 மணி நேரமும் செயற்பட வேண்டிய அவசர சிகிச்சைப் பிரிவு வெளிநோயாளர் பிரிவு செயற்படும் காலத்தினுள்ளும் தீவிரமாக செயற்பட்டிருக்கவில்லை. நீண்ட காலம் தொட்டு பாவனைக்குட்படாத மருந்துகள் மற்றும் ஏனைய உபகரணப் பெட்டிகள் செயற்படாது காணப்பட்டமை 2019 செப்டெம்பர் 12 ஆம் திகதி அந்தப் பிரிவினைப் பரீட்சிக்கையில் அவதானிக்கப்பட்டது. 2019 ஜூன் 04 ஆம் திகதி தொடக்கம் அவசர சிகிச்சை பிரிவிற்கு வைத்தியரொருவர் இணைக்கப்பட்டிருந்த போதிலும் வைத்தியசாலைப் பணிப்பாளரின் வாய்மொழி மூல அறிவுறுத்தலுக்கு அமைய | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | அந்த வைத்தியர் உற்பத்திசாலைக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டள்ளார். அதன் காரணமாக 2019 ஜுன் 22 ஆம் திகதி தொடக்கம் மேலும் அவசர சிகிச்சைப் பிரிவு செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்றது. | | |
| (உ) | வெளிநோயாளர் பிரிவிற்கு இணைக்கப்பட்டள்ள மருந்தாளர், மருந்து இணைப்பாளர் மற்றும் டிக்கட் எழுதுனர் போன்றோருக்கு வேலைச் சுழற்சி முறை தயாரிப்பதற்கு மற்றும் அவர்களின் கடமைகளை மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஊழியர்கள் தமது தற்றுணிவின் பேரில் பிற்பகல் 12.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரையிலும் கடமையினை நிறைவேற்றுவதாகக் குறிப்பிட்டு நாளாந்த வேலை நேரத்தினை 06 மணித்தியாலத்திற்கு மட்டுப்படுத்தி பிற்பகல் 2.00 மணிக்கு நாளாந்த கடமை நேரம் முடிவுறும் வகையில் கடமையில் ஈடுபடுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | நிபுணத்துவ தரத்திலுள்ள வைத்தியர்களுக்கு வேலை சுழற்சி முறை தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அவர்களின் தற்றுணிவின் பேரில் சிகிச்சை பிரிவினை நடாத்தும் தினங்களும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. உடல் சிகிச்சை (யுனானி), உடல் சிகிச்சை (சித்த), உடல் சிகிச்சை (மூட்டு நோய்), உடல் சிகிச்சை (சரும நோய்) அறுவை சிகிச்சை பிரிவுகளின் பொறுப்பான நிபுணத்துவ தர வைத்தியரின் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானித்திற்கமைய திங்கட்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரையிலும் கிழமையில் 6 நாட்களும் சிகிச்சை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பினும் முதியோர், சிறுவர், சுவநாரி, ஆரோக்கிய பாதுகாப்பு துறைகளின் கீழ் சிகிச்சை அலகுகளை நடாத்தும் நிபுணத்துவத் தரத்திலான வைத்தியர்கள் கிழமையில் 02 நாட்கள், 03 நாட்கள் மற்றும் 04 நாட்கள் என சிகிச்சையகம் நடாத்தி இருந்தனர். மிகுதி நாட்களில் அவர்கள் கடமையினை நிறைவேற்றும் முறையை தெளிவுபடுத்தாததுடன் அவர்கள் தங்கியிருக்கும் பிரிவில் அல்லது முழு நேரம் தங்கியிருக்காமை அவதானிக்கப்பட்டது. | | |
| (எ) | நோயளர்களின் கட்டில்களின் அடியில் போடப்பட்டுள்ள பலகைகள் இற்றுப் போய் பூச்சிகள் பரவி இருந்தமையும், ஒரு சில மெத்தைகள் நடுவில் குழிந்து நோயாளர்களின் பாவனைக்குப் பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டமையும் 03 ஆம் இலக்க வாட்டில் சிகிச்சை பெறும் நோயளர்களிடமிருந்து உறுதி செய்யப்பட்ட வகையில் அந்த வாட்டினுள் எலிகள் பெருகி இருந்தமையும், வாட்டு சுத்தமின்றி காணப்பட்டமையும் மற்றும் வைத்தியசாலை வளாகத்தில் காணப்பட்ட கழிவறைக் கிடங்குகளிலிருந்து வெளிவரும் தாங்க முடியாத அதிகளவிலான துர்நாற்றம் காரணமாக நோயளர்கள் அதிக அசௌகரியமாக இருந்தமையும் 2019 ஒக்டோபர் 17 ஆம் திகதி 02, 04 மற்றும் 06 ஆம் வாட்டுகள் தொடர்பில் பரீட்சிப்பின் போது உறுதிசெய்யப்பட்டது. | -மேற்கூறியவாறு- | -மேற்கூறியவாறு- |

3.5.11 பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையின் சுகாதாரக் கல்வி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையில் ஆயுர்வேத சுகாதார கற்கைகள் பிரிவொன்றை தாபித்து வெளி நோயாளர் பிரிவிற்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள வருகைதரும் நோயாளர்கள் மற்றும் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு அறிவூட்டவும், நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியிராததுடன், சுகாதாரக் கல்வி விடயம் தொடர்பில் ஆயுர்வேத திணைக்களமும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுகாதார கற்கைகள் பிரிவொன்றை தாபித்து நோயாளர்களுக்கு அறிவூட்டவும், நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி பிணியாய்வு சேவைகளை வழங்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

3.5.12 பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையின் பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனைக்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள 07 ஆயுர்வேத மருத்துவர்கள் மற்றும் 08 உதவிப் பதவியணியை உள்ளடக்கிய நிரந்தர பதவியணி மருத்துவமனை வளாகத்திற்கு புறம்பாக திங்கள் முதல் சனிக்கிழமை வரையிலும் நடாத்தப்படும் நிரந்தர பாராளுமன்ற பிணியாய்வுகளுக்கும், வாரமொன்றிற்கு 02 நாட்கள் படியான வேறு 05 பிணியாய்வுகளுக்கும் இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர் இந்த | மருத்துவமனை வளாகத்திற்கு புறம்பாக நடாத்தப்படும் பிணியாய்வுகளுக்கு ஈடுபடுத்தப்படும் ஆயுர்வேத மருத்துவர் உள்ளடங்கலான ஏனைய பதவியணி திட்டவட்டமான முறைமையின் அடிப்படையில் இணைப்பு செய்வதற்கு மற்றும் இடமாற்ற நடைமுறைக்கு உட்படுத்துவதற்கும், இந்த பிணியாய்வுகள் மூலம் மேற்கொள்ளப்படும் | மருத்துவமனை வளாகத்திற்கு புறம்பாக நடாத்தப்படும் பிணியாய்வுகளுக்கு மருத்துவர்கள் மற்றும் உதவிப் பதவியணியை தெரிவு செய்யும் பொருத்தமான நடைமுறையை தயாரிப்பதற்கு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், சரியான தரவுகளை பெற்றுக்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செயற்படாத காரணத்தால் |

| | | | |
|---|---|---|---|
| | பிணியாய்வுகளுக்கு தேவையான மருந்துகள் மருத்துவமனையின் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்டிருந்தது. நிரந்தர பாராளுமன்ற பிணியாய்வுகளுக்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள ஆயுர்வேத பெண் மருத்துவர் 2007 ஆண்டு முதலாகவும், இயன்முறையாளர் 2011ஆம் ஆண்டு முதலாகவும், பராமரிப்பாளர்கள் 2013ஆம் ஆண்டு முதலாகவும் இணைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அவர்கள் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை மற்றும் அவர்கள் பொதுவான இடமாற்ற நடைமுறைக்கு உட்படுத்தப்படாமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த பிணியாய்வுகள் மூலம் மேற்கொள்ளப்படும் பணிப்பொறுப்பு தொடர்பிலும், நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்பான தரவுகள் தொடர்பிலும் மருந்துப்பொருட்களின் பயன்பாடு தொடர்பிலும் பின்தொடர் நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. | பணிப்பொறுப்பு மற்றும் நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்பான தரவுகளை உரிய முறையில் பேணுவததற்கும், மருந்துப்பொருட்களின் பயன்பாடு தொடர்பில் பின்தொடர்வதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | தொடர்ந்தும் வெளிப்படைத்தன்மையுடன் பணிகளை மேற்கொள்வதற்குரிய ஆலோசனைக் கோவையுடனான சுற்றறிக்கையினை வெளியிடப்படுமென்பது. |
| (ஆ) | பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனை வளாகத்திற்கு புறம்பாக நடாத்தப்படும் பிணியாய்வுகள் 06இற்காக இணைப்பு செய்யப்பட்டிருந்த மருத்துவமனைப் பதவியணியின் வருகை மற்றும் வெளிச்செல்லல் போன்று பிணியாய்வுகள் நடாத்தப்பட்டமையை உறுதிசெய்யும் எழுத்துமூல சான்றுகள் குறித்த | பிணியாய்வுகளுக்கு ஈடுபடுத்தப்படும் ஆயுர்வேத மருத்துவர் உள்ளடங்கலான ஏனைய பதவியணியின் வருகை மற்றும் வெளிச்செல்லல் குறிப்புகளை குறித்த நிறுவனங்களிலிருந்து வரவழைத்து, உரிய முறையில் செக்ரோலினை பேணுவதற்கு மற்றும் | பிணியாய்வுகளை நடாத்தியுள்ள நிறுவனங்களின் தலைவர்களீன் கீழ் வருகைப் பதிவேடொன்றை பேணுதல் மற்றும் அதன் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் மருத்துவமனையின் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டின் போது |

நிறுவனங்களால் வரவழைக்கப்பட்டிருக்காததுடன், வருகைக் குறிப்புகள் (செக் ரோல்) உரிய முறையில் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த பிணியாய்வுகளுக்கு இணைப்பு செய்யப்பட்ட ஆயுர்வேத மருத்துவர்கள் மூவரின் 2019ஆம் ஆண்டிற்கான விடுமுறைகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. வாரமொன்றுக்கு 2 நாட்கள் பாராளுமன்றத்தில் நடாத்தப்படும் பிணியாய்வுகளுக்கு பங்குபற்றும் மருத்துவர் ஒருவரின் 2019 சனவரி முதல் 2019 திசெம்பர் மாதம வரையான வருகைக் குறிப்புகள் (செக் ரோல்) மற்றும் விடுப்புகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அந்த மருத்துவர் 2017ஆம் ஆண்டின் போது அறிவிக்காது சேவைக்கு வருகைதராமை காரணமாக 48 சம்பளமற்ற விடுமுறைகளுக்காக ரூபா 109,762 தொகையை 6 தவணைகளில் செலுத்தியிருந்ததுடன், 2018ஆம் ஆண்டின் போதும் சேவைக்கு அறிக்கையிடல் மற்றும் பிணியாய்வுகளுக்கு பங்குபற்றல் ஆண்டு முழுவதும் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. விடுகை விண்ணப்பங்களை சமர்ப்பித்திராத போது 2018ஆம் ஆண்டின் போது அறிவிக்காது சேவைக்கு வருகைதராமை காரணமாக 48 நாட்கள் எவ்வாறு கணிப்பிடப்பட்டது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. அந்த நிலைமையை திணைக்களத்திற்க அறிவிப்பதற்கு சேவைக்கு அறிக்கையிடாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபனவிதிக் கோவையின் பிரகாரம் செயலாற்றுவதற்கு உரிய பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பிணியாய்வுகளுக்கு இணைந்துகொண்ட ஒரு மருத்துவர் நீங்களாக ஏனைய அனைவரினதும் விடுமுறைகளை பதிவு செய்தல் நிறைவடைந்துள்ளது என்பது, இந்த மருத்துவ உத்தியோகத்தர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு பிரதி ஆணையாளரினால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பது மற்றும் உடனடியாக இந்த உத்தியோகத்தர் தொடர்பிலான விடுமுறை விபரங்கள் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என மருத்துவமனையின் பணிப்பாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், தொடர்ச்சியாக அந்த மருத்துவருக்கு பிணியாய்வுகளுக்கு பங்குபற்றுமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அந்த மருத்துவர் 2019ஆம் ஆண்டின் போதும் தொடர்ச்சியாக சேவைக்கு அறிக்கையிட்டிராததுடன், தொடர்ச்சியாக சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | | |
| (இ) | ஆயுர்வேத மருத்துவர்கள் மற்றும் இயன்முறையாளர்கள் வாரத்தின் 05 நாட்கள் மற்றும் சனிக்கிழமைகளில் ½ படியாகவும், பராமரிப்பாளர்கள் வாரமொன்றிற்கு 6 நாட்களும் கடமையாற்ற வேண்டும். கனிக்கிழமைகளில் பாராளுமன்ற பிணியாய்வுகள் நடாத்தப்பட்டிராத போதிலும், அந்த பிணியாய்வுகளுக்கு இணைப்பு செய்யப்பட்டிருந்த ஆயுர்வேத பதவியணி பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனைக்கு வருகையை பதிவு செய்வததற்கு அல்லது விடுப்புகளை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணியாய்வுகளுக்கு ஈடுபடுத்தப்படும் உத்தியோகத்தர்களின் கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாராளுமன்ற பிணியாய்வில் ஈடுபடும் ஆயுர்வேத மருத்துவர், இயன்முறையாளர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் பொரள்ள மருத்துவமனைக்கு இணைப்பு செய்வதற்கும், எதிர்காலத்தில் கடமைகள் வேலை மமாற்றங்களில் மூலம் 06 மாதங்களுக்கு ஒரு தடைவ உத்தியோகத்தர்களை மாற்றுவதற்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை. |
| (ஈ) | இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் உத்தியோகத்தர்களின் இடமாற்றல் நடைமுறையின் 2.2.1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய இடமாற்றல் நடைமுறை அமுல்படுத்தப்பட்டிராததுடன், பொரள்ள ஆயுர்வேத | இடமாற்ற நடைமுறையின் பிரகாரம் வருடாந்த இடமாற்றங்கள் இடம்பெற வேண்டும். | ஒரே இடத்தில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தையுடைய இனைத்து மருத்துவர்களினதும் இடமாற்றங்கள் 2021 சனவரி மாதம் முதல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | மருத்துவமனைக்கு இணைப்பு செய்யப்பட்ட 112 மருத்துவர்களில் 74 பேருக்கு 5 முதல் 23 வருட காலமாக அந்த மருத்துவமனையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் | | |
| (உ) | பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையின் 2019 ஏப்ரல் 30ஆந் திகதி வரையிலும் 73 தாதியர் பதவிகள், பெண் தாதியர் 07 மற்றும் மருத்துவச்சி பதவிகள் 08 வெற்றிடமாக காணப்பட்டதுடன், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது, ஒப்பந்த அடிப்படையில் 02 உத்தியோகத்தரிகள், தாதியர்கள் மற்றும் மருத்துவச்சிகளை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், ஆயுர்வேத தாதியர் சேவைக்கு இணைத்துக்கொள்ளல், பயிற்றுவித்தல் மற்றும் பதவியுயர்த்துவதற்காக நடைமுறையொன்றினை இனங்காணுவதற்கு, ஆட்சேர்ப்பதற்குமான நடைமுறையொன்றினை இனங்காணுவதற்கும், ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றினை தயாரிப்பதற்கும், நாடளாவிய ரீதியில் இடமாற்றல் நடைமுறையொன்றினை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆயுர்வேத தாதியர் உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளல், பயிற்றுவித்தல் மற்றும் பதவியுயர்த்துவதற்காக நடைமுறையொன்றினை இனங்காணுவதற்கு, ஆட்சேர்ப்பதற்கு நடைமுறையொன்றை தாபிப்பதற்கு மற்றும் நாடளாவிய ரீதியில் இடமாற்றல் நடைமுறையொன்றினை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2018 யூலை 24ஆந் திகதி முதல் ஆயுர்வேத மருத்துவ சபையின் பதிவாளர் பதவியில் முழுநேர | ஆயுர்வேத சேவைப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டு உயர் தரத்திலான | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் சேவையில் ஈடுபடுவதற்கும், 2019 சனவரி 01ஆந் திகதி முதல் நிரந்தர பதவியாக பொரள்ள மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் பதவிக்காகவும், 2020 சனவரி 31ஆந் திகதி முதல் பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையின் பணிப்பாளர் பதவியின் கடமைகளை மேவுகை செய்வதற்காகவும் உயர் தரத்தின் ஆயுர்வேத மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இந்த உத்தியோகத்தருக்கு பல பதவிகள் கையளிக்கப்பட்டிருந்த காரணத்தால், அவரது நிரந்தர பதவியின் கடமைகளை முழுநேர அடிப்படையில் நிறைவேற்ற முடியாதிருந்ததுடன், அதன் காரணமாக மருத்துவமனையின் நிர்வாக பணிகளுக்கான அவரது பங்களிப்பு போதுமானதாக காணப்படவில்லை. பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையின் பணிப்பாளர் பதவியின் வெற்றிடத்தினை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவிகளுக்காக துரிதமாக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து பதவியணியின் வெற்றிடங்களை துரிதமாக நிரப்பி நோயாளர்களுக்கான சிகிச்சைகளை உயர் தரத்துடன் வழங்க வேண்டும். | |
| (எ) | மருத்துவமனையின் சிகிச்சைகளில் ஈடுபட்டுள்ள ஆயுர்வேத மருத்துவர்களுக்கு அல்லது உரிய முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட சட்டரீதியான ஏற்பாடுகளின் கீழ் மு.ப 12.00 முதல் மு.ப 2.00 வரையிலுமான ஓய்வு நேரம் கிடைக்காத நிலைமையினுள், மருத்துவமனையின் நிர்வாக நடவடிக்கைகளுக்குரிய பதவிகளில் உள்ள ஆயுர்வேத மருத்துவர்கள் மு.ப 12.00 முதல் மு.ப 2.00 | பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடமைகளில் ஈடுபட வேண்டும். | - மேற்படி - |

வரையிலுமான ஓய்வு நேரத்தை அனுபவிக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | சிறைச்சாலைகள் ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகத்தின் தொற்றாத நோய்களுக்கான சிகிச்சை முகாமைத்துவ கட்டமைப்பு தொடர்பில் ஆராய்ச்சிகளை மேம்படுத்தும் செயற்திட்டப் பணிகளுக்காக நேரடியாக பங்களிப்பு செய்ய வேண்டிய 02 விஞ்ஞானிகள், 08 மருத்துவ நிபுணர் பதவிகள், 05 மருத்துவ உத்தியோகத்தர் பதவிகள், 08 விஞ்ஞான உத்தியோகத்தர் பதவிகள், 18 ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 03 மருத்துவ ஆராய்ச்சியாளர் பதவிகள் மற்றும் 14 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் 11 அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி உதவியாளர் பதவிகளில் 05 பதவிகளை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்காது உரிய ஆய்வுகூட வசதிகளையும் பூர்த்தி செய்யாது 2013, 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் ரூபா 164,965,735 பெறுமதியான ஆராய்ச்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2016ஆம் ஆண்டின் போதும், ரூபா 38,047,100 கிரயமான ஆராய்ச்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2020 செப்தம்பர் 30ஆந் திகதியளவில் அந்த | சாத்தியவளக் கற்கையொன்றினை மேற்கொண்டு முறையான திட்டமொன்றின் பிரகாரம் செயற்திட்டத்தினை ஆரம்பிக்காமை மற்றும் ஆராய்ச்சி உபகரணங்களை கொள்வனவு செய்வதமையுடன் இணைந்ததாக பதவியணியை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்காமை காரணமாக செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முடியாதிருந்தது. அதன் காரணமாக குறித்த உத்தியோகத்தர்களை துரிதமாக ஆட்சேர்த்து செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள வும், ஆராய்ச்சி உபகரணங்களை உச்ச இயலளவுடன் பயன்படுத்துவதற்கும், ஆராய்ச்சி பெறுபேறுகளினூடாக மக்களுக்கு உச்ச நலன் கிடைக்கும் வகையிலான வேலைத்திட்டமொன்றை நிறுவி நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதவியணியை ஆட்சேர்ப்பதற்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களின் ரூபா 65,068,677 கிரயமான உபகரணங்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன், ரூபா 137,944,158 கிரயமான உபரகணங்கள் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | | |
| (ஐ) | பாரம்பரிய அறிவை பாதுகாத்தல் மற்றும் சுதேச மருத்துவத்தை மேம்படுத்தும் குறிக்கோளுடன் நாடு முழுவதிலுமுள்ள அனைத்து பாரம்பரிய வைத்தியரினதும் அறிவைப் பாதுகாப்பதற்கு மற்றும் அதற்காக கேள்வி பார்வை தகவல் கேந்திர நிலையத்தை தோற்றுவிப்பதற்குத் தீர்மானித்து ரூபா 23,557,178 செலவு செய்து அப்பிரிவிற்குத் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், அப்பிரிவின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நேரடியாகத் தேவைப்படுகின்ற கேள்வி பார்வை பிரிவிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர், நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீடியோ பதிப்பாளர், ஒலிபெருக்கி பதிப்பாளரும் உதவியாளரும் கணனி செயற்பாட்டாளர் ஆகிய 07 பதவிகளும் 03 கமரா நிபுணர் பதவிகளும் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை அங்கீகரிக்கப்பட்டு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்க ாததனால் உரிய உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. | குறித்த உத்தியோகத்தர்களை துரிதமாக ஆட்சேர்த்து செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள வும், செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள வும், மக்களுக்கு உச்ச நலன் கிடைக்கும் வகையிலான வேலைத்திட்டமொன்றை நிறுவி நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிரந்தரப் பதவியணியொன்றினை இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதாகவும், தற்போது ஆட்சேர்ப்பு இடம்பெறும்வரையிலும் தேவையான உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்டுள்ளனர். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | பொரள்ள ஆயுர்வேத போதனா மருத்துவமனையின் 2019 ஆகஸ்ட் 31ஆந் திகதியில் உள்ளபடியாக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியை ஒப்பிடும் போது 06 தாதியர் உத்தியோகத்தர்கள், 06மருந்தகவியலாளர் (Pharmacist), 16 இயன்முறையாளர்கள், 04 மருத்துவமனை எழுதுவினைஞர்கள், 69 பராமரிப்பாளர்கள், 54 ஆயுர்வேத சேவை உதவியாளர்கள் மற்றும் 07 சமையற்காரர்களுக்கான வெற்றிடமொன்று நிலவியது. நோயாளர் சிகிச்சைகளுக்காக அத்தியாவசியமான இந்த பதவிகள்வெற்றிடமாக நிலவும் போது முன் அங்கீகாரமின்றி வழக்கமொன்றாக தொலைபேசி அமைப்பினூடாக குறித்த உத்தியோகத்தர்கள் மற்றம் ஊழியர்கள் விடுப்புகளை பெற்றுக்கொள்ள இடமளிக்கப்பட்டிருந்தது. சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதற்காக வருகைதரும் நோயாளர்கள் அதன் காரணமாக அசௌகரியத்திற்கு உள்ளாகியிருந்தனர். மருத்துவமனையின் முகாமைத்துவத்தினால் அது தொடர்பில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதற்கும், அது தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம், பதவியணியின் கடமைகளுக்காக ஈடுபடுத்துவதற்கும், விடுப்பகள் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடொன்றை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்ட பதவியுயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் காரணமாகவும், இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்காக பதிற்கடமைக்கு உத்தியோகத்தர்களை வழங்காமையும் காரணமாக ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக. |

3.5.13 பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனைக்கு தேவையான அறுவைச்சிகிச்சை மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையில் அந்தந்த பிரிவுகளின் தேவைப்பாட்டினை அடிப்படையாக கொண்டு அறுவைச்சிகிச்சை பொருட்கள் மற்றும் உபகரணங்களின் வருடாந்த தேவைப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலான மாதமொன்றிற்கு ரூபா 200,000 ஆன உச்ச பெறுமதிக்கு அறுவைச்சிகிச்சை பொருட்கள் மற்றும் உபகரணங்கள் இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக போதியளவான இருப்பு மீதியொன்றை பேணியவாறு மருத்துவமனையின் பல்வேறு பிரிவுகளுக்காக அறுவைச்சிகிச்சை பொருட்கள் மற்றும் உபகரணங்கள் உரிய முறையில் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | மருத்துவமனையின் அறுவைச்சிகிச்சை பொருட்கள் மற்றும் உபகரணங்களின் வருடாந்த தேவைப்பாட்டினை இனங்கண்டு, போதியளவான இருப்பு மட்டத்தினை பேணியவாறு மருத்துவமனையின் பல்வேறு பிரிவுகளுக்கு அறுவைச்சிகிச்சை பொருட்கள் மற்றும் உபகரணங்கள் நோயாளர்களுக்கான சிகிச்சைகளுக்காக தொடர்ச்சியான விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

3.5.14 பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையை பராமரித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் போது பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையின் மின்சார பராமரிப்பு பணிகள் தொடர்பில் மின்சார சபையுடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை | மருத்துவமனையின் மின் பராமரிப்பு பணிகளுக்காக பிணியாய்வு சேவைகளின் தரத்திற்கு சேதமேற்படாத வகையில் பேணிச் செல்வதற்கு | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிராததுடன், மின்சார பராமரிப்பு பணிகள் தொடர்பில் முறையான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1 (ஊ) வழிகாட்டிக்கமையாத வகையில் செயற்பட்டு 2018 ஆகஸ்ட் மற்றும் செப்தம்பர் மாதங்களில் ரூபா 216,370 செலவிடப்பட்டு மின்சார உபகரணங்களை திறந்த சந்தையில் கொள்வனவு செய்திருந்ததுடன், அந்த உபகரணங்கள் களஞ்சிய இருப்பு பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பில் கவனம் செலுத்தாது முற்பணங்களை தீர்ப்பதற்காக மற்றும் கட்டுநிதி தொகையினை மீளளிப்பு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டுகளுக்கு திணைக்களத்தினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் மாதமளவில் மின்சார உபகரணங்களின் மீதியொன்று இல்லாதிருந்தமையால், அந்த மாதம் முதல் மருத்துவமனையின் மின்சாரப் பராமரிப்பு பணிகள் அந்தந்த வாட்டுகளிலுள்ள நோயாளர்களிடமிருந்து சேகரிக்கப்படும் பணத்திலிருந்து மேற்கொள்ளப்படுவதாக மின் பொறியியலாளரால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் (Job) பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. | பொருத்தமான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | |
| (ஆ) | நீண்ட காலமாக பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையின் சாக்கன் குழிகளி நிரம்பி வழிகின்றமை மற்றும் அவற்றின் | இந்த நிலைமையை தவிர்த்துக்கொள்ள நிரந்தர தீர்வொன்றினை வழங்குவதற்கு மற்றும் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| பழுதுபார்த்தல் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெறாமை ஆகியன நோயாளர்களுக்கான பிணியாய்வு சேவைகளை நடாத்திச் செல்வதில் பாதகமான முறையில் தாக்கமளித்திருந்தது. எனினும், அதற்கு நிரந்தர தீர்வொன்றை வழங்குவதற்கு ஆயுர்வேத திணைக்களம் தலையிட்டிராததுடன், தற்காலிக பழுதுபார்த்தலொன்று மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், நீர்க்குழாய் கட்டமைப்பு ஏதாவது ஒரு காலப்பகுதிக்கு ஒரு தடவை பரிசோதிக்கப்படாதிருந்ததுடன் , அவ்வாறான அத்தியாவசிய சேவைகளை நிறைவேற்றுவதற்காக பராமரிப்பு பிரிவொன்றும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | பராமரிப்பு அலகொன்றின் கீழ் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

### 3.5.15 பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனைக்கு கிடைக்கும் வெகுமதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொரள்ளை ஆயுர்வேத மருத்துவமனையின் வெளி நோயாளர் பிரிவில் 47 சிகிச்சை பிரிவுகள், தங்கியிருந்து சிகிச்சை பெறும் பிரிவில் 03 வாட்டுகள் மற்றும் கட்டணம் செலுத்தாது சிகிச்சை பெறும் 10 வாட்டுகளின் மருந்து உற்பத்திக்கூடங்கள், மருத்துவமனை பணிப்பாளர் அலுவலகம் மற்றும் தாதியர் அலுவலகம் ஆகிய பிரிவுகளுக்காக நோயாளர்களால் வழங்கப்படும் பணம், உபகரணங்கள், லிலன் புடவைகள், பச்சை மற்றும் உலர்ந்த மருந்துப்பொருட்கள் ஆகிய வெகுமதிகளை பொறுப்பேற்றல், பொருட்பதிவேட்டிற்கு உட்படுத்தல் | மருத்துவமனைக்கு கிடைக்கும் நிதி மற்றும் நிதியல்லாத வெகுமதிகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் பதிவேட்டிற்கு உட்படுத்துவதற்கும், வெகுமதி வழங்கியவர்களை ஊக்குவிக்கும் நடைமுறையும் உள்ளடக்கப்பட்ட நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | மருத்துவமனைக்கு கிடைக்கும் வெகுமதிகள் வெளிப்படைத்தன்மையுடன் பொருட்பதிவேட்டிற்கு உட்படுத்துவதற்கு மற்றும் இருப்பு பதிவேட்டில் உட்படுத்தப்படாத பொருட்களை இருப்பு பதிவேட்டில் பதிவு செய்வதற்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை. |

மற்றும் இருப்பு பதிவேட்டிற்கு உட்படுத்துவதற்காக முறையான மற்றும் பொருத்தமான நடைமுறையொன்ற அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. 2019ஆம் ஆண்டின் போது வெகுமதிகளாக கிடைத்திருந்த 37 மின்சார உபகரணங்கள், 14 மர மற்றும் பிளாஸ்டிக் உபகரணங்கள் மற்றும் ஏனைய 87 பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பொருட்பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

### 3.5.16 பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையின் சீருடைப் பாவனை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையின் மருந்தகவியலாளர் மற்றும் மின் பொறியியலாளர் ஆகிய பதவிகளை வகிக்கும் 20 உத்தியோகத்தர்களக்கு நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் கோரி சீருடையொன்றினை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்காத போதிலும், மாதமொன்றிற்கு ரூபா 9,300 படியாக ரூபா 186,000 சீருடைப் படிகளாக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | சீருடை அறிமுகப்படுத்தப்படாத உத்தியோகத்தர்களுக்காக சீருடையொன்றினை அறிமுகப்படுத்துவதற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சீருடையொன்று அறிமுகப்படுத்தப்படாத போது செலுத்தப்பட்டுள்ள சீருடைப் படிகள் அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | இதுரையிலும் சீருடை அறிமுகப்படுத்தப்படாத பதவிகளுக்காக சீருடையை அறிமுகப்படுத்துவதற்காக குழுவொன்றினை நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

3.5.17 பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையின் சிற்றுண்டிச்சாலை, கூட்டுத்தாபன விற்பனை நிலையம் மற்றும் பால் விற்பனை நிலையம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையின் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச்செல்லும் நபரிடமிருந்து 2015 சனவரி முதல் மாதாந்தம் ரூபா 41,000 படியாக அரச வருமானத்திற்கு செலவு வைக்கும் நோக்கில் திணைக்களத்தினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 2.46 மில்லியன் தொகை மருத்துவமனையின் விளையாட்டு மற்றும் நலன்புரி சங்கத்தினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சிற்றுண்டிச்சாலையின் வாடகையை அரச வருமானத்திற்கு செலவு வைக்கும் நோக்கில் குறித்த விளையாட்டு மற்றும் நலன்புரி சங்கத்திற்கு மீள பெற்றுகொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், இது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். | சிற்றுண்டிச்சாலையை நடாத்துதல் தொடர்பில் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய நீர், மின்சாரம் மற்றும் தள வாடகையை அறவிடுதல் தொடர்பில் தேடிப்பார்த்து நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துவைத்துக் கொள்கின்றேன். |
| (ஆ) இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தினால் 2017ஆம் ஆண்டின் போது ரூபா 641,128 செலவிடப்பட்டு பொரள்ளை ஆயுர்வேத போதனா மருத்துவமனையின் வளாகத்தினுள் விற்பனை நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | விற்பனை நிலையத்திற்காக வாடகையொன்று அறவிடப்பட்டு அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும் என்பது. | இது தொடர்பில் தேடிப்பார்த்து நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துவைத்துக் கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பொரள்ளை ஆயுர்வேத போதனா மருத்துவமனையின் வளாகத்தினுள் நடாத்திச் செல்லப்படும் தேசிய கால்நடை வளங்கள் சபையின் (NLDB) பால் விற்பனை நிலையத்திற்கு 2014ஆம் ஆண்டு முதல் வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | பொருளாதார வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

3.5.18 பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையை போதனா மருத்துவமனையாக அபிவிருத்தி செய்தல் கட்டம் 2

----------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------------------- | ---------------------- | -------------------------------------- |
| (அ) | பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையில் 434 கட்டில்களை இடக்கூடிய 07 மாடிகளைக் கொண்ட புதிய கட்டிடம் ரூபா 1,164.13 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2018 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், நிர்மாணத் திட்டங்களுக்கு மற்றும் பொறியியலாளரின் மதிப்பீடுகளுக்கு பிரதான நீர்த்தாங்கி (Water Sump) மற்றும் கழிவுநீர் அகற்றல் கட்டமைப்பு உள்ளடக்கப்படாமையால் 2020 நவம்பர் 30ஆந் திகதி வரையிலும் 23 மாதங்களாக கட்டிடத்தினை நோயளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு பயன்படுத்த முடியாது காணப்பட்டது. | தேவை உரிய முறையில் இனங்காணப்பட்டு திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும். அவ்வாறல்லாது, ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதன் பின்னர் தேவைகளை இனங்காணுவதன் மூலம் அரசிற்கு பெருந்தொகையான செலவினம் ஏற்க நேரிடுவதுடன், அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட வேண்டும். | வெளிவாரி கட்டிடம் மற்றும் 07 மாடிகளைக் கொண்ட கட்டிடம் ஆகிய 02 கட்டிடங்களுக்கும் பொதுவான நீர்த்தாங்கியொன்று திட்டமிடப்பட்டிருந்ததுடன் , தீயணைப்பு திட்டத்தின் பிரகாரம் இரு கட்டிடங்களிலும் தீப்பிடித்தால் அந்த நீரின் அளவு போதுமானதாக இருக்காது என்பதால் புதிய நீர்த்தாங்கியொன்று பொருத்தப்பட வேண்டும் என்பது, கழிவுநீர் அகற்றல் திட்டத்தின் பிரகாரம் பம்பியை பயன்படுத்தி பொது வீதியிலுள்ள கழிவுகளை கொண்டுசெல்லும் வழிக்கு கழிவுகள் வடிந்தோடும் விதத்தில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2016ஆம் ஆண்டின் போது கொழும்பு மாநகர |

| | | | |
|---|---|---|---|
| | | | சபையினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கமைய , பிரதான வீதிக்கு கழிவுகளை வெளியிடுவதற்கு முன்னர் மலக் கழிவுடன் சேர்த்து அங்கிருந்து பிரதான வீதிக்கு தொடர்புபடுத்த வேண்டும் என்பதால் மலக்கழிவு சேர்வதற்காக இடமொன்றை நிர்மாணிப்பதற்கான தேவையேற்பட்டதுடன், இந்த இரு பணிகளுக்கும் தனியானதொரு அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு உரிய பணிகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது. |
| (ஆ) | ரூபா 7.37 மில்லியன் மொத்தக் கிரயமுடைய 200 தொலைக்காட்சி இயந்திரங்கள், 108 நீர் கொதிக்கவைக்கும் கீஸர்கள் (Water Geezers) மற்றும் 166 வளிச்சீராக்கல் இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்ததுடன், அவற்றின் உத்தரவாத காலம் முடிவடையும் வரையிலும் கட்டிடத்தினால் பயன்படுத்த முடியாதிருந்தது. புதிதாக பிரதான நீர்த்தாங்கியொன்று மற்றும் கழிவுநீர் அகற்றல் கட்டமைப்பொன்றினை நிர்மாணிக்கும் போது நடைமுறைச் சிக்கல்கள் பல எழக்கூடும் என அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், உரிய காலப்பகுதியினுள் ஒப்பந்ததாரர்களின் பணிகளை நிறைவு செய்வதற்கும் தாமதமின்றி ஒப்பந்ததாரருக்கு கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டிய போதிலும், 2015ஆம் ஆண்டு முதல் அந்தந்த அளவுகளுக்காக போதியளவான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத காரணத்தால், ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களுக்காக உரிய காலப்பகுதியினுள் கொடுப்பனவு மேற்கொள்ள முடியாதிருந்தது. பட்டில்களுக்கு கொடுப்பனவு செலுத்துவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக ஒப்பந்ததாரரால் ரூபா 27.91 மில்லியனான தாமதக் கட்டணங்கள் கோரப்பட்டிருந்தன. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாத உத்தியோகத்தர்களுக்கு பொறுப்பு கையளிக்கப்பட வேண்டும். | 2015ஆம் ஆண்டின் போது செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அந்த ஆண்டில் இதற்காக நிதியேற்பாடு மெற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் ஒப்பந்ததாரருக்கு கொடுப்பனவு செய்ய முடியாத காரணத்தால் தாமதக் கட்டணம் கோரப்பட்டுள்ளதாக. |
| (ஈ) | நிர்மாணங்களுக்காக பயன்படுத்தப்பட்ட நீர் மற்றும் மின்சாரம் உள்ளடங்களான நிர்வாக பணிகளுக்கா ரூபா 152,169,944 ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்ததாரரினால் அங்கீகாரமின்றி சட்டத்திற்கு முரணாக பொரள்ள ஆயுர்வேத மருத்துவமனையின் மின்சாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. எனினும், ஒப்பந்ததாரரிடமிருந்து பயன்படுத்திய மொத்த மின்சாரத்திற்காக கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. நிர்மாண நடவடிக்கைகளுக்காக பொருட்களை கொண்டு செல்லும் போது மருத்துவமனையின் நீர்க் கட்டமைப்பிற்கு சேதம் விளைவித்திருந்த காரணத்தால் 2016 செப்தம்பர் 11ஆந் திகதி முதல் 2016 ஒக்தோபர் 12ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் | ஒப்பந்ததாரரிடமிருந்து உரிய மின்சார மற்றும் நீர் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நீர்ப்பட்டியல்கள் ரூபா 324,411 இனால் அதிகரித்திருந்தது. எனினும், அது தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுத்து பணம் அறவிடுவதற்கு உரிய பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 2018 ஆகஸ்ட் 29ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் இந்த நிர்மாணத்திற்குரியதாக மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,113.15 மில்லியனிலிருந்து ரூபா 1,906.41 மில்லியன் வரையிலும் அதிகரிப்பதற்கு மற்றும மருத்துவமனைக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 300 மில்லியன் செலவிடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் 71 சதவீதத்தால் அதிகரித்திருந்தமையால் பொருத்தமான பெறுகைகள் குழுவொன்று மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்றினை நியமித்து விலகல் மதிப்பிடப்பட வேண்டுமென நிதி அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆகஸ்ட் 29ஆந் திகதிய அமப/18/1788/814/050 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | - மேற்படி - |
| (ஊ) | 2019 பெப்ரவரி 05ஆந் திகதி 1/2019ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பின்வரும் விலகல்களின் அங்கீகாரத்திற்காக கிரய மதிப்பீட்டு மீளாய்வுக் குழுவிற்கு (Cost Estimate Review Committee) சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 பெப்ரவரி 05ஆந் திகதிய 1/2019ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | - மேற்படி - |

3.5.19 ஆயுர்வேத சமூக சுகாதார உத்தியோகத்தர்களின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2014 ஒக்தோபர் 10ஆந் திகதிய அமப/13/0163/542/003-11 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிராகரம், 308 ஆயுர்வேத சமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள் மேல், மத்திய மற்றும் சபரகமுவ நீங்கலான ஏனைய மாகாணங்களில் சிறுநீரக நோயாளர்கள் அதிகாளவில் காணப்படும் பிரதேச செயலகப் பிரிவுகளின் 5 வருட கட்டாய சேவைக்காலம் எனும் நிபந்தனைக்கமைய 2014 ஒக்தோபர் 01ஆந் திகதி முதல் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் ஆரம்ப தரத்திலான மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு உள்ளீர்ப்பு செய்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு முரணாக 2019 திசெம்பர் 31ஆந் திகதியளவில் 164 சமூக சுகாதார மருத்துவ உதவி உத்தியோகத்தர்கள் மேல், மத்திய மற்றும் சபரகமுவ மாகாணங்களுக்கு இணைப்பு செய்யப்பட்டிருந்தனர். | அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், அதற்கு முரணாக செயற்படுவதனை திருத்துவதற்கும், அனைத்து சமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் சிறுநீரக நோய் சிகிச்சைக்குரியதாக கடமைகளை கையளிப்பதற்கும், கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அந்த 164 உத்தியோகத்தர்களுக்கு சிறுநீரக நோய் சிகிச்சைக்குரியதாக கடமைகளை கையளித்து கண்காணிப்பொன்று இடம்பெற்றிருக்காததுடன், 2019ஆம் ஆண்டு வரையிலுமான 5 வருடங்களினுள் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் என்ன என்பது தொடர்பில் பரிசோதிப்பதற்காக ஆயுர்வேத திணைக்களத்தினால் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நாடளாவிய ரீதியில் நியமிக்கப்பட்டுள்ள சமூக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களை சிறுநீரக நோய் சிகிச்சைகளுக்காக ஆக்கபூர்வமான முறையில் பங்களிக்கச்செய்வதற்காக செயன்முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்கும் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கும் நடைமுறையொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. 2014ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்ககாக 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளின் போது மாத்திரம் இந்த 164 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த சம்பளம் மற்றும் படிகள் முறையே ரூபா 197,283,650 மற்றும் ரூபா 228,218,477 ஆகும். | - மேற்படி - | - மேற்படி - |

3.5.20 அநுராதபுரம் சமூக சுகாதார மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு மருத்துவ முறைமையை அடிப்படையாக கொண்டு போதியளவான வசதிகளற்ற கிராமிய பொது மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் உள்நாட்டு மருத்துவ முறைமைகளினூடாக சமூக சுகாதார வசதிகளை ஏற்படுத்தும் செயற்திட்டம் நிர்ணயிக்கப்பட்ட செயற்திட்டமொன்றாக 2001 செப்தம்பர் முதல் 2003 செப்தம்பர் மாதம் வரையிலும் அநுராதபுரம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இதன் பின்னர் அந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமை காரணமாக மீண்டுமொரு தடவை 2004ஆம் ஆண்டு முதல் அநுராதபுரம் மாவட்டத்தில் மிகவும் செயற்திறனாக நடைமுறைப்படுத்துவதற்கும், அதன் வெற்றித்தன்மையை அடிப்படையாக கொண்டு 2005ஆம் ஆண்டு ஏனைய மாவட்டங்களுக்கு வியாபிப்பதற்குரிய அமைச்சரவைப் பத்திரத்திற்காக 2001-2003 வரையிலும் பெற்றுக்கொண்ட செயன்முன்னேற்றம் தொடர்பில் அறிக்கையொன்று மற்றும் செயற்திட்டத்தினை மீள ஆரம்பிப்பதற்கான விரிவான செயற்திட்ட அறிக்கையொன்றினை திறைசேரிக்கும் அனுப்புவதற்கான இணக்கப்பாட்டின் கீழ் | அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், அதற்கு முரணாக செயற்படுவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அமைச்சரவையின் பரிந்துரையின் பிரகாரம் மேலதிக பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளமை. |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தினை முன்னெடுப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், செயன்முன்னேற்ற அறிக்கை அல்லது விரிவான செயற்திட்ட அறிக்கையொன்று திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2005ஆம் ஆண்டு வரையிலும் அநுராதபுரம் மாவட்டத்தின் அமுல்படுத்தப்படவுள்ள செயற்திட்டமொன்றாக நடைமுறைப்படுத்துவதற்கும், அதன் வெற்றித்தன்மையின் அடிப்படையில் 2005ஆம் ஆண்டு முதல் ஏனைய மாவட்டங்களில் செயற்திட்டத்தினை வியாபிப்பதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், 2005ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தின் வெற்றித்தன்மை மதிப்பீடு செய்யப்பட்டிராததுடன், ஏனைய மாவட்டங்களில் வியாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக அமைச்சரவையின் அங்கீகாரமின்றி செயற்திட்டம் அநுராதபுரம் மாவட்டத்திலேயே 14 வருடங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | அந்த மாதிரி செயற்திட்டம் சுதேச மருத்துவ அமைச்சின் கண்காணிப்பின் கீழ் நடாத்திச்செல்லப்பட்டதுடன், 2018ஆம் ஆண்டு முதல் செயற்திட்டக் கண்காணிப்பு பணிகள் ஆயுர்வேத திணைக்களத்திற்க ஒப்படைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| 2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலும் இந்த செயற்திட்டத்தின் உள்ளபடியான செலவினம் ரூபா 608,306,465 ஆகும். எனினும், செயற்திட்டத்தின் ஆரம்பம் முதல் முறையாக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், முறையான செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக மாதாந்தம் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்படும் அளவு செயன்முன்னேற்றமாக அறிக்கையிடப்பட்டிருந்தது. | | |

4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்வதற்காக நிறுவனத்தினால் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குகள் மற்றும், அந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்காக நிலவும் இடைவெளியும், செயன்முன்னேற்றத்தினை அளீடு செய்வதற்கான பொருத்தமான குறிகாட்டியொன்றும் இனங்காணப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் அவ்வாறான குறிகாட்டியொன்றை இனங்கண்டு நோக்கங்களில் இடையப்பட்ட அளவு மற்றும் செவலு வைத்தல்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டிய துறைகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதுடன் தொடர்புடைய இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை இனங்காணல் மற்றும் செயன்முன்னேற்றத்தினை அளவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். | அவதானிப்புகளுடன் இணங்குகின்றமை மற்றும் இது தொடர்பில் அபிவிருத்திப் பிரிவிற்கு தெரிவித்து தேவையான குறிகாட்டிகளை தயாரிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டதென்பது. |

5. நல்லாளுகை

5.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆயுர்வேத மருத்துவமனை மற்றும் 10 உப நிறுவனங்கள் மற்றும் 06 மூலிகைத் தோட்டங்கள் உள்ளடங்களாக ஒட்டுமொத்த திணைக்களமும், ஆயுர்வேத மருத்துவ சபையின் உள்ளக கணக்காய்விற்காக நிதிப்பிரமாணம் 134(1) இன் பிரகாரம் தாபிக்கப்பட்டிருந்த உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு பிரதான உள்ளக கணக்காய்வாளருடன் மேலும் இரு உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர். அந்த இரு உத்தியோகத்தர்களும் எல்லா வருடங்களிலும் சனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியினுள் பொருள் மெய்மையாய்வு கடமைகள் மற்றும் ஔடத பானம் வழங்குதல் ஆகிய பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணைப்பு செய்யப்பட்டிருந்த காரணத்தால் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் சுயாதீனத்துவம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுப் பணிகளுக்காக போதியளவான மனித மற்றும் பௌதீக வளங்கள் வழங்கப்பட வேண்டியதுடன், நிதிப்பிரமாணம் 134(1) இன் பிரகாரம், கணக்கு நடவடிக்கைகளுக்கு கடப்பட்டுள்ள மற்றும் திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்கு அல்ல அதில் ஈடுபட்டுள்ளவரிகளிலிருந்தும் சுதந்திரமாக உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்புகளுடன் இணங்குவதாகவும், எதிர்காலத்தில் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்காக பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்றை ஏற்படுத்தி பதவியணியை தாபித்து, சுயாதீனமாக செயற்படக்கூடிய கணக்காய்வுப் பிரிவொன்று நிறுவப்படும் என்பது. |